தமிழ்ப் பொழில்

தஞ்சைக் கரந்தைத் தமிழ்ச் சங்கத் திங்கள் வெளியீடு

துணர்	திருவள்ளுவர் யாண்டு ௲௯௱௯௰௭ விசுவாவசு, பங்குனி 1966—மார்ச்	மலர்
௪௧		௧௨.

பொழிற்றொண்டர் பேசுகின்றார் :—

தமிழ்க் கல்லூரிகள்

> "நம்மிந்திய அரசோ அல்லது நம்மிந்தியப் பல்கலைக் கழகங்களோ தமிழிலக்கிய மதிப்பினை முழுமையாக அறிந்து போற்றவில்லை. ஆகவே தொன்மைமிகும் தென்னிந்தியச் செம்மொழி இலக்கியப் படிப்பில் தம் வாழ்நாளைக் கழிப்பவர்கள், ஆழ்கடலுக்கடியில் முத் தெடுக்க முயல்வாரோடு ஒத்திருக்கின்றனர்"

இக்கருத்தினை "ஒரு தமிழ் மாணவர்" என்று தம்கல்லறையில் தம்மைப் பற்றிப் பொறிக்கப்படவேண்டும் என்று வேண்டிக்கொண்ட டாக்டர் போப்பையர், தாம தமிழகத்தில் வாழ்ந்த காலத்தில்-ஏறக்குறைய ஒரு நூற்றாண்டுக்குமுன் கூறினர். போப்பையர், தாய்மொழியால் தமிழரல்லர்; இனத்தால் தமிழரல்லர்; நாட்டால் தமிழரல்லர், ஆனால் அவர் தமிழ் பயின்றமையால் தமிழர், கலங்கரை விளக்கமென நிற்கும் அவரது தமிழ்த்தொண்டினால் தமிழர்; மொழி. இன, நாட்டு எல்லைகளை எல்லாம் கடந்து நிற்கும் உணர்வினால் அவர் தமிழர்.

சென்னை மாநிலம் தமிழ்நாடாயிற்று. மாநில மொழி தமிழாயிற்று. ஆனால் தமிழ்க் கல்லூரிகளின் நிலையினை

எண்ணிப் பார்க்கும்போது, போப்பையரின் பொன்மொழியே நம்முன் நிற்கின்றது. என்றோ அவர் சொன்ன கருத்து இன்றும் அவ்வாறே நிலைபெற்றிருப்பதை நினைக்க மிகவும் வருந்துகின்றோம். ஆகவே அரசியலார், பல்கலைக் கழகத்தார், தமிழ்ப் பெருமக்கள் ஆகியோரின் சிந்தனைக்குத் தமிழ்க் கல்லூரிகளின் நிலைபற்றிய விளக்கத்தைப் படைப்பதோடு, அவற்றை எல்லா வகையிலும் உயர்த்துவதற்குரிய வழிகளில் அவர்களைச் செயலாற்றுமாறும் வேண்டுகின்றோம்.

இன்றைய நிலை :—

தமிழகத்தில் பத்துத் தமிழ்க் கல்லூரிகள் இயங்குகின்றன. அவை விழியாக அமையும் மொழியையும், இதயமாக இலங்கும் இலக்கியத்தையும், தமிழக வரலாற்றையும் கல்வெட்டையும், பிறவற்றையும மாணவர்கட்குச் சிறப்பாகக் கற்பிக்கின்றன. நம் நாட்டுப் பண்பாட்டினை மாணவர்களுக்கு உணர்த்தி அவர்களை உலகத்தோடு ஒட்ட ஒழுகும் உயர் நெறியில் இக்கல்லூரிகள் பயிற்றுவிக்கின்றன. உயர்ந்த குடிமைப் பண்புமிக்க எதிர்கால மக்களை உருவாக்கும் பெருந்தொண்டினை மேற்கொண்டு தமிழைத் தனிச் சிறப்புடன் கற்பிக்கும் தமிழ் கல்லூரிகளுக்கு உரிய நிலை, தமிழகத்தில் இன்னும் தரப்படவில்லை என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகின்றோம்.

கலைக்கல்லூரியைப் பற்றியோ, தொழிற் கல்லூரியைப் பற்றியோ கொள்ளும் உயர்ந்த எண்ணம் தமிழ்க் கல்லூரியைப்பற்றிப் பலருக்கு இயல்பாகவே எழுவதில்லை. கலைக்கல்லூரி, பட்டப்படிப்புத் துறையில் பயிற்சிதருகின்றது. தொழிற் கல்லூரிகளாகிய பொறியியல், மருத்துவம் போன்ற கல்லூரிகள் அவற்றிற்குரிய தொழிற் படிப்பைத் தருகின்றன. நுண்கலைகளுள் ஒன்றான இசையைக் கற்பிக்கும் இசைக் கல்லூரி அதன் துறையில் இசைஞர்களைப் பயிற்றுவிக்கின்றது ; அதேபோன்று நுண் கலைகளுள் ஒன்றான மொழியைக் கற்பிக்கும் தமிழ்க் கல்லூரியும் அதன் பல்துறையில் மாணவர்கட்குப் பயிற்சி தந்து இலக்கிய ஆசிரியர்களை உருவாக்குகின்றது.

இருப்பினும், தமிழ்க் கல்லூரியைக் கல்லூரியாகவே பலரும் கருதுவது இல்லை. அதற்குக் காரணம் நடைமுறையில் உள்ள சில குறைபாடுகளே ஆகும்: அதில் பணியாற்றுவோருக்கு ஊதியம் மிகக் குறைவு. பல்கலைக் கழகத் தேர்விற்கு மாணவர்களை நான்காண்டுகள் பயிற்றுவிக்கும் அக்கல்லூரிகளுக்குப் பல்கலைக் கழகக் குழுக்களில், மற்றைய கல்லூரிகளுக்கு அளிக்கப்பெறுவது போன்ற சார்புடைமை (Representation) இல்லை. காலமாறுபாடுகளுக்கேற்றவாறு இக்கல்லூரிகளில் பாட ஏற்பாடு மாறவில்லை என்றும கூறுவர்.

ஆங்கில ஆட்சிக் காலத்தின் தொடக்கத்தில் தமிழில் பட்டம் பெருதவராயினும் மரபு வழியாகத் தமிழறிந்தவர்கள் தமிழாசிரியராகப் (Vernacular Pandits) பணியாற்றினர். பின்னர், சமக்கிருதம் போன்ற மொழிகளுக்கு ஏற்றம் தர வேண்டும் என்ற நோக்கோடு கீழ்த்திசைக் கலைப்பள்ளிகள் தோற்றம் பெற்றன. புலவர் பட்டம் பெற்றவர்களோடு பெரும புலவர்களை அடுத்துப் பாடங்களைக் கேட்டுப் பயிற்சி பெற்றவரும் ஆசிரியராக இப்பள்ளிகளில் பணியாற்றினர் கீழ்த்திசைக் கலைப்பள்ளிகள், கீழ்த்திசைக் கலைக் கல்லூரிகளாக மாறிய பின்னர், பல்கலைக் கழக வித்துவான் பட்டம் பெற்றவர்கள் தாம் தமிழாசிரியர்களாவதற்குத் தகுதியுடையவர்என்னும் வரையறை செய்யப்பெற்றது. தமிழோடு ஆங்கிலமும் பயின்று பட்டம் பெற்றவர்களையே முதல்வராக அமர்த்தவேண்டும் என்பதும் நடைமுறையில் உள்ளது.

> வித்துவான் பட்டம் பெற்றவர்களும், பி. ஏ., பி. ஓ. எல்., பி. டி., எம். ஏ., எம். ஓ. எல். போன்ற பட்டம் பெற்றவர்களுமாக ஏறக்குறைய எழுபதுபேர் தமிழகத்திலுள்ள பத்துத் தமிழ்க் கல்லூரிகளில் பணியாற்றுகின்றனர்.

கலைக் கல்லூரிகள் போன்று தமிழ்க் கல்லூரிகளின் பாட ஏற்பாடு பல்கலைக் கழகத்தால் வரையறை செய்யப்பெற்றுள்ளது. உயர்நிலைப்பள்ளியிறுதி வகுப்பில் தேறிக் கல்லூரிகளில் சேரும் தகுதிபெற்றவரும் (S. S. L. C. eligible), பல்கலைக் கழகத்தாரால் நடத்தப்பெறும் புலவர் நுழைவுத் தேர்வில்

தேர்ச்சி பெற்றவரும் "மெட்ரிகுலேசன்" தேர்ச்சி பெற்றோரும் புலவர் முதல் வகுப்பில் சேரும் தகுதிபெற்றவர் என்று பல்கலைக் கழகம் வரையறுத்துள்ளது. ஆனால் அக் கல்லூரிகளுக்குரிய அடிப்படை உரிமையையும் இன்னும் தராமலிருப்பது பெரிதும் வருந்துதற்குரியதாகும். ஆகவே, தமிழ்க் கல்லூரிகளின் நிலையை எல்லா வகையிலும் உயர்த்தி, அவற்றிற்குரிய நிலையை உடனடியாக அளிக்கவேண்டும். அதற்கேற்ற சில கருத்துக்களைக் கீழே பண்ட்டித்திருக்கின்றோம். அரசியலாரும், பல்கலைக் கழகத்தாரும் உரிய ஏற்பாடுகளை உடனடியாக மேற்கொள்ளவேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறோம்.

அ. பொது:

1 பொதுவாகக் கீழ்திசைக் கலைக்கல்லூரிகள் (Oriental Colleges) என்று, தமிழ், சமக்கிருதம் போன்ற நம் நாட்டு மொழிகளைக் கற்பிக்கும் கல்லூரிகள் இப்போது அழைக்கப்பெறுகின்றன. இவை நம்நாட்டு மொழிகளைக் கற்பிக்கின்றமையால் கீழ்த்திசைக் கல்லூரிகள் என்னும் பெயரை உடனடியாக மாற்றி, எம்மொழியைக் கற்பிக்கின்றதோ அதன் பெயரால் **தமிழ்க்கல்லூரி** யென்றோ, சமக்கிருதக் கல்லூரி யென்றோ அழைக்கப்படுதல் வேண்டும்.

2 பல்கலைக் கழகம் வரையறுத்த பாடத் திட்டத்தைப் பல்கலைக் கழகத் தகுதிபெற்ற பேராசிரியர்கள், பல்கலைக் கழகத் தேர்விற்காக மாணவர்களுக்கு முறையாக நான் காண்டுகள் பயிற்சிதரும் தமிழ்க் கல்லூரிகளையும் ஏனைய கலைக் கல்லூரி, இசைக் கல்லூரி. போன்றே மதித்து அவற்றிற்கொப்ப உயர்நிலையைத் தருதல்வேண்டும்.

3 மேலும் மாநில மொழியாகிய தமிழைச் சிறப்புற வளர்ப்பதில் பணிபுரியும் **தமிழ்க் கல்லூரிகளைத் தனிச் சிறப்புக் கல்லூரிகளாகக்** கருதவேண்டும்.

ஆ. **ஊதியம் :**

4 தமிழ்க் கல்லூரிகளில் பல்கலைக் கழக வித்துவான் பட்டம் பெற்றவர்களும், பி ஏ., பி. ஓ. எல்., பி. டி., எம். ஏ., எம். ஓ. எல்., போன்ற பட்டம்பெற்றவர்களும் பேராசிரியர்களாகவும் முதல்வர்களாகவும் பணியாற்றுகின்றனர். இவர்களுக்கு அளிக்கப்பெறும் ஊதியம் மிகவும் இரங்கத்தக்கதாயுள்ளது.

நுண்கலைகளுள் ஒன்றான இசையைச் சிறப்பாக கற்பிக்கும் இசைக் கல்லூரியில் பணியாற்றுபவருடைய அடிப்படை ஊதிய நிலை பின்வருமாறு உள்ளது.
இசைக்கல்லூரி :—

விரிவுரையாளர் – ரூ. 225—10—275—15—350.
பேராசிரியர் – ரூ. 300—25—600.
முதல்வர் – ரூ. 600—30—900.

நுண்கலைகளுள் ஒன்றான மொழியைத் தனிச் சிறப்புடன் கற்பிக்கும் தமிழ்க் கல்லூரிகளுக்கு, இசைக் கல்லூரியில் பணியாற்றுபவருக்கு தரும் ஊதிய அளவுகூடத்தராதது மிகவும் வருந்தத்தக்கதாகும். 1960-இல் அரசியலார் வெளியிட்ட திருந்திய ஊதிய அறிக்கையிலும், தமிழ்க் கல்லூரிகளுக்குரிய ஊதிய நிலை வரையறுக்கப்படாமையும் ஈண்டுக் குறிக்கத்தக்கது. ஆகவே இசைக் கல்லூரி, கலைக்கல்லூரி ஆகியவற்றோடு தமிழ்க் கல்லூரியையும் ஒப்ப மதித்து ஊதிய உயர்ச்சியைத் தரவேண்டும்.

5 **தமிழுக்கு ஏற்றம் தரும் வகையில்** தமிழ்க் கல்லூரிகளுக்கு, அரசியலார் இப்போது அளிக்கும் விழுக்காட்டு முறையை மாற்றி, முழுமையாக மானியத்தை (Full Teaching Grant) கொடுக்கவேண்டும்.

இ. **பல்கலைக் கழகத் தொடர்பு:—**

6 பல்கலைக் கழகத் தகுதிபெற்ற எல்லாத் தமிழ்க் கல்லூரி முதல்வர்களையும் பல்கலைக் கழகக் கல்விக் குழுவிலும் (Academic Council), ஆட்சிக் குழுவிலும் (Senate)

ஏனைய கல்லூரி முதல்வர்களைப்போன்றே பணித் துறை சார்ந்த (ex-Officio) உறுப்பினராக ஆக்குதல் வேண்டும்.

7 பல்கலைக் கழகக் தமிழ்க் கல்லூரிப் பாடப் புத்தகக் குழு வில்தமிழ்க் கல்லூரியில் பணியாற்றுபவரையே உறுப் பினர் ஆக்கவேண்டும்.

8 வித்துவான் படிப்பினை இளங்கலைப் பட்டப் படிப்போடு ஒத்ததாகக் கருதுதல் வேண்டும்.

ஈ. **புலவர் (ஆசிரியர்) பயிற்சி :**

9 புலவர் பயிற்சியை இப்போது அரசினர் ஐந்து திங்கள் கால எல்லையில் நடத்துகின்றனர். அண்ணமலைப் பல்கலைக் கழகம் ஓராண்டு நடத்துகின்றது. புலவர் படித்தவர்கள் அனைவருமே ஆசிரியராகச் செல்வதற்குத் தான் வாய்ப்பிருக்கின்றது. (ஓரிருவர் விதிவிலக்காக இருக்கலாம்) ஆகவே, புலவர் பயிற்சியைத் தனியாக அமைக்காமல் புலவர் நிறைவு நிலைப் பாடத்திட்டத் தோடு இணைத்து ஆசிரியப் பயிற்சியையும் தருதல் வேண்டும்.

10 இந்நிலை இயலாதென்ருல், மாதிரி உயர்நிலைப் பள்ளியும், பயிற்சியை நடத்துவதற்குரிய தகுதியும் பெற்ற ஆசிரியர்கள் பணியாற்றும் தமிழ்க் கல்லூரிகளில் நான்காண்டுப் படிப்பிற்குப் பிறகு புலவர்கள் தனி யாகவே ஆசிரியப் பயிற்சிபெற வாய்ப்புத்தருதல் வேண்டும்.

தமிழுக்குத் தகுவுயர்வளிக்கும் வகையில் உடனடியாகச் செயற்பட வேண்டுமென்று தமிழக அரசியலாரையும், தமிழகப் பல்கலைக் கழகங்களையும் கேட்டுக்கொள்வ தோடு, தமிழ்ப் பெருமக்களையும் அவர்களுடைய முயற் சியைத் தூண்டுவதில் ஊக்கம் தருமாறும் வேண்டு கின்ருேம்.

ச, சுயம்பிரகாசம், பி. ஏ , பி. எல்.

தலைவர்,

கரந்தைத் தமிழ்ச் சங்கம், தஞ்சை

விளையாட்டு விழா.

கரந்தைப் புலவர் கல்லூரி, உமாமகேசுவர உயர்நிலைப் பள்ளி, இராதாகிருட்டின தொடக்கப்பள்ளி ஆகிய சங்கக் கல்வி நிலையங்களின் விளையாட்டு விழா 12—3—66 ஆம் நாள் உமாமகேசுவரபுர விளையாட்டுத் திடலில் நடை பெற்றது. அதில் மேற்குறித்த மூன்று கல்வி நிலையங் களின் மாணவ மாணவியரும் பங்கு கொண்டு சிறப்பித்தனர். அன்று பெய்த மழையின் காரணமாகப் பரிசளிப்பு விழா 18—3—66 ஆம் நாள் தஞ்சை நகராட்சி ஆணையர் திரு. **கா. பழனிவேலு** பி. ஏ. அவர்களின் தலைமையில் சங்கப் பெருமன்றத்தில் நிகழ்ந்தது. இறை வணக்கத்திற்குப் பின், கல்லூரி முதல்வர் பேராசிரியர் ந. **சிவமணி** எம். ஏ., பி. டி.. அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார்கள். பின்னர், தலைவர் அவர்கள் மாணவ மாணவியரைப் பாராட்டிப் பரிசளித் தார்கள். பின்னர் உயர்நிலைப்பள்ளித் தலைமையாசிரியர் திரு **ச. பஞ்சநதம் பிள்ளை** எம். ஏ., எல். டி., அவர்கள் நன்றி நவில நாட்டு வாழ்த்துடன் விழா இனிது நிறைவேறியது.

வெள்ளி விழா

உமாமகேசுவர உயர்நிலைப்பள்ளியின் வெள்ளி விழா 25—3—66, 26—3—66 ஆகிய இரு நாட்களிலும் சிறப்பாக நடைபெற்றது. முதல் நாள் நிகழ்ச்சியில் **கண்காட்சித் திறப்பு விழாவும்**, இரண்டாம் நாள் நிகழ்ச்சியில் **நீரேற்று நிலையத் திறப்பு விழாவும் வெள்ளி விழா மலர் வெளியீடும்** இரு நாட்களிலும் சொற்பொழிவுகளும் இடம்பெற்றன.

இறை வணக்கத்திற்குப்பின் முதல் நாள் விழா சங்கத் தலைவர் திரு. **ச. சுயம்பிரகாசம்** பி. ஏ., பி. எல்., அவர்களின் வரவேற்புரையுடன் தொடங்கப்பெற்றது. விழாவிற்குத் தஞ்சை மாவட்ட வருவாய்த்துறை அலுவலர் திரு. R. **பத்மநாபன்** எம். ஏ., அவர்கள் தலைமையேற்றுக் கண்காட் சியைத் திறந்துவைத்துப் பேசினார்கள். விழாவில் செம் பொருட் காட்சியர் வித்துவான் திரு. T. **ஐயன்பெருமாள் கோனார்** அவர்கள் "கவிதைச் சுவை" என்னும் பொருள்பற்றியும், முன்னாள் தலைமையாசிரியர் கரந்தை திரு. **சிவ. குப்புசாமி பிள்ளை**

அவர்கள் "சங்க நினைவுகள்" என்னும் பொருள்பற்றியும் திருச்சிப் பொன்னையா உயர்நிலைப்பள்ளித் தலைமைத் தமிழாசிரியர் வித்துவான் திரு. **கோ. இரத்தினம் பிள்ளை** அவர்கள் "காட்சியும் பயனும்" என்னும் பொருள்பற்றியும் சிறப்புச் சொற்பொழிவாற்றினார்கள். தலைவர் முடிவுரைக்குப் பின் பள்ளித் தலைமையாசிரியர் திரு ச. பஞ்சநதம் பிள்ளை எம். ஏ., எல். டி., அவர்கள் நன்றி நவிலச் சங்க வாழ்த்துடன் விழா இனிது முடிவுற்றது.

26—3—66 ஆம் நாள் விழாவிற்குச் சென்னை உயர்நீதி மன்ற நடுவர் திரு. **இரத்தின சதாசிவம்** எம். எல்., அவர்கள் தலைமை தாங்கிச் சிறப்பித்தார்கள். சங்கத் தலைவா திரு. **ச. சுயம்பிரகாசம்** பி. ஏ., பி. எல்., அவர்கள் தமது வரவேற்புரையில் சங்க நடைமுறைகளையும் வெள்ளி விழா நிகழ்ச்சி அமைப்புக்களையும் விளக்கி அனைவரையும் வரவேற்றுப் பேசினார்கள். வெள்ளிவிழா நினைவாகப் புதிதாகக் கட்டப்பட்ட "நீரேற்று நிலயத்தை"த் தஞ்சை மாவட்டத் தண்டல் நாயகம் திரு. C. G. **அரங்கபாசியம்** ஐ. ஏ. எஸ்., அவர்கள் திறந்துவைத்து விரிவுரையாற்றினார்கள். பள்ளியின் ஆண்டறிக்கையைப் பள்ளித் தலைமையாசிரியரும் மாணவர் இலக்கிய மன்ற அறிக்கையை மன்றச் செயலாளரும் படித்தனர். விழாத் தலைவர் அவர்கள் தம் தலைமையுரையில் கல்வி நிலைபற்றியும் மாணவர் கடமை பற்றியும் குறிப்பிட்டு, வெள்ளிவிழா மலரினை வெளியிட்டார்கள். விழாவில் அண்ணாமலைப் பல்கலைக் கழகத் தமிழாராய்ச்சித்துறைத் துணைப் பேராசிரியர் திரு. வித்துவான், **க. வெள்ளைவாரணனார்** அவர்கள் "மலரும் தமிழ்" என்பது பற்றியும், பூண்டி, புட்பங் கல்லூரித் தமிழ்த் துணைப் பேராசிரியர் திரு. **கி. கோதண்டபாணி** எம். ஏ. அவர்கள் "கவிஞன் நோக்கில் உலகியற் பொருள்கள்" என்பது பற்றியும் சிறப்புரையாற்றினார்கள் மாணவர் இலக்கிய மன்றச் சார்பில் நடைபெற்ற போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ மாணவியர்க்குத் தலைவர் அவர்கள் பரிசளித்து முடிப்புரையாற்றினார்கள். பள்ளித் தலைமையாசிரியர் அவர்கள் நன்றி நவிலச் சங்க வாழ்த்துடனும் நாட்டு வாழ்த்துடனும் வெள்ளி விழா இனிது நடந்தேறியது.

(322 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மொழிநூல் முதல்வர்.

புலவர். தி: நா. அறிவொளி.

2. "தமிழில் பகுதி விகாரப்படினும் முற்றும் மாறாது நிற்கும். பிற பாஷைகளில் வினைப்பகுதிகள் இயல்பாலும் கால இடங்களாலும் பகுதி வடிவத்துக்குச் சம்பந்தமில்லாத வடிவமடைகின்றன."

3. "நீதி நூல்—மனிதரனைவருக்கும், ஒருவர் மற்றொருவரின் உடல் பொருள் மனங்களுக்கு ஊறின்றி நடந்துகொள்ளும் வழி கூறும் நூல். இனம் பற்றி ஞாயம் பிறழ்ந்து நடக்கும் நடக்கையைக் கூறுவதன்று. அது திருக்குறள், நல்வழி, நன்னெறி, நீதிநெறி விளக்கம், இன்னா நாற்பது, இனியவை நாற்பது, நாலடியார், நான்மணிக் கடிகை, திரிகடுகம், சிறுபஞ்சமூலம் முதலிய தமிழ் நூற்களில் காணலாம்."

"வடமொழியில் தரும சாத்திரங்களென்ற மிருதிகளில் குற்றங்களுக்குத் தண்டனை இனம்பற்றி ஓரமாய் விதித்துளது. தன்மை தரு மார்க்கங்களைக் கூறலிலும் ஓரம் உளது.'; (பாயிர-பக்: 28)

"தமிழிலுள்ள நூல்களழிந்து அதன் புதுமை முதலாயின வேறுபட்டமையானும், ஆரிய நூல்கள் அழிவுபடாது அதன் புதுமை முதலாயின வேறுபடாமையானும் ஆரியம் தமிழ்க்குப் பிற்படாதென்பது பொருந்தும்." (பாயிர-பக்: 34-35)

"தமிழ் மொழியில் எல்லாப் பொருள்களும் இரண்டு திணைகளாகப் பகுக்கப்பட்டுள. பகுத்தறிவுடைய உயிர்களை உயர்திணையாகப் பகுத்து உயர்திணையில் ஆணுக்கு ஆண்பாலும், பெண்ணுக்குப் பெண்பாலும், பலருக்குப் பலர்பாலும், பகுத்தறிவற்ற விலங்கு, பறவை, நீர்வாழ்வன முதலிய உயிர்களையும, மரம், கொடி, செடி, கல், மண் முதலிய சடப்பொருள்களையும் அஃறிணையாகப் பகுத்து, அவற்றுள் ஒன்றுக்கு ஒன்றன்பாலும், பலவற்றுக்குப் பலவின்பாலும் கூறப்படுகின்றன. தமிழில் விலங்கு, பறவை, மீன்களின் ஆண் பெண்களுக்கும் வெவ்வேறு பெயர் கூறப்படினும் அவைகள் பகுத்தறிவற்ற தாழ்ந்த சாதியிற்பட்டனவாதலால், அஃறிணையாகவே கூறப்படுகின்றன. ஆங்கிலம் முதலிய பாஷைகளில் சில அஃறிணையுயிர்களுக்கும, பொருள்களுக்கும் ஆண்பால் பெண்பால் கூறினும் அங்ஙனம் கூறப்பட்ட ஒன்றையே பலபால்களில் கூறுவதும், உயர்திணை ஆண்பாலுக்கு பெண்பாற் பெயரும், பெண்பாலுக்கு ஆண்பால் ஒன்றன்பாற் பெயரும் முறை பிறழ்ந்து கூறுவதுமில்லை.

வடமொழியிலோ பால்வரம்பின்றிப் பலவாறு கூறுவதுண்டு. அவை வருமாறு:—

மனைவிபெயர் :

1. பார்யா—பெண்பால் (ஒருமை)
2. தாரா—ஆண்பால் (என்றும் பன்மை)
3. களத்ரம்—ஒன்றன்பால்.

கல்லின் பெயர் :

1. பாஷாண—ஆண்பால்
2. சிலா—பெண்பால்
3. உபலம்—ஒன்றன்பால்.

ஆதலால் தமிழ், பால்-திணையில் இனியது (பாயிர-பக்: 29)

"ஒரு பாழையிலுள்ள சொற்களின் ஒலிகளை வரிவடிவிற் காண்பித்தற்கு இன்றியமையாத கருவியாயுள்ளது எழுத்து. அங்ஙனமே தமிழ் மொழியின் ஒலியும், அதற்குரிய எழுத்தும, ஒற்றுமை பெற்றுள்ளது. வேறு சில பாழைகளைப் போல் அவை ஒன்றுக்கொன்று வேற்றுமையுடையன அல்ல." (பாயிர: பக்; 29)

"வினைச் சொல். ஒருவன் ஒருத்தி ஒன்றன் செயல்களைக் குறிக்குஞ் சொல். தமிழ் மொழியில் வினைகள் அவற்றைத் தெளிவு பெறக் குறிக்கின்றன.

பிற பல மொழிகளிலுள்ள வினைச் சொற்கள் ஆண் பெண் ஒன்றன்பால்களின் வேறுபாட்டை விளக்குகின்றில.

ஆங்கிலம்.	வடமொழி
செல்கின்றான் (He) goes	(ஸ) கச்சதி
செல்கின்றாள் (She) goes	(ஸா) கச்சதி
செல்கின்றது (It) goes	தத் (கச்சதி)

ஆங்கிலம்	இலத்தீனம்
நேசிக்கின்றான் (He) loves	(Ille) amat
நேசிக்கின்றாள் (She) loves	(Illa) amat
நேசிக்கின்றது (It) loves	(Illud) amat.

தமிழின் சொற்றொடரழகு

"சொற்றொடர்—வாக்கியம், அது எழுவாய், பயனிலை. செயப்படுபொருள் என்பன கூடி ஒரு கருத்தை விளக்குவது. அவற்றோடு அவற்றின் உரிச் சொற்களும், இடைப் பிறவரலாய் வரும் வாக்கியங்களும் சேர்ந்து குழூஉச் சொற்றொடராயும் வரும். பெயர் வினைகளின் இயலை உரிச் சொற்களானும், பல பெயர்களை இடைச் சொற்

களானும், பல் வினைகளை எச்சத்தானும் பெயர்க்கும் வினைக்கும் உள்ள சம்பந்தத்தை வேற்றுமை யுருபானும், புணர்த்தித் தமிழில் விளக்கப்படுகின்றது. ஆங்கிலத்தினும் தமிழ் போலவே சொற்றொடருளது.

வடமொழி, இலத்தீன், கிரீக்கு முதலிய பாஷைகளில் அங்ஙனம் அழகு பெருது விசேடனங்களுக்கும் அவை தழுவும் பெயர்களின் வேற்றுமை பால்களை யேற்றல், இடைச் சொல் இன்றிக் கூறல் முதலிய அழகின்மை உள்ளன.'' (பாயிர: பக்: 30—31)

இடைக்காலத் தமிழரும் தமிழ்ப் புலவருள் ஒருசாராரும் வடமொழி யடிமையராய், உண்மையுணர்வின்றித் திரிந்த நிலையால் தமிழ் எய்திய கேடுகள் அளவற்றனவாம் அவ்வடமொழிக் கெடு நோயை யகற்றிப் பாடுபட்ட பல நற்றமிழறிஞருள் நம் மொழிநூலாசிரியர் கார்த்திகேயரும் குறிப்பிடத்தக்கவராவார். தமிழ், வடமொழி தோன்றுவதற்குமுன் தோன்றியதென்பதையும், வடமொழியின் குறைகளையும், தமிழின் நிறைகளையும், இருமொழியமைப்பின் ஒற்றுமை — வேற்றுமைகளையும் திட்பமாக ஆராய்ந்துணர்த்தியுள்ளார் :—

கர்மம், பத்மம், பக்வம், ஆத்மா முதலியன நாவின் செயற்கை நிகழ்ச்சியாகிய மயக்கங்களாம். தமிழெழுத்துக்கள் ஒவ்வொன்றும் வெவ்வேறிடத்துப் பிறப்பனவாம். நாவிற்கு எளிமையாதல் வேண்டி மெய்கள் சாரியை பெற்றே வரும்.'' (பக்: 33)

''வடமொழிக்கண் எல்லாக் கலைகளும் நிரம்பியிருந்தலின் புலவர்கள், அதுவே முன்னுண்டாய மொழியெனவும் இன்றுங் கூறுவர். ஆங்கில மொழிக்கண் இஞ்ஞான்று எல்லாக் கலைகளும் நிரம்பி யிருத்தலின், அதனை முன்மொழி யென்னல் கூடுமோ? ஓர் மொழிக்கு அரசுரிமை வரின் எல்லாக் கலைகளுந் தோன்றலும், அவ்வுரிமை போயின், வருந்திக் கற்பாரின்மையின் அக்கலைகளுள் அரியன அழிதலும் இயற்கை. ஓர்மொழி கலைகள் நிரம்பப் பெற்றிருத்தல் ஓர் காலத்து அது வளர்ச்சி பெற்றமையை யுணர்த்தற் பாலதன்றி முன்மொழி யென்பதை யுணர்த்தற் பாலதன்று.

முன்மொழி யிதுவெனத் துணிவதற்கு நாவினது இயற்கை யாராய்ச்சி செய்தல் வேண்டும். அவ்வாராய்ச்சியே அதனை யுணர்த்தற்பாலது.

வடமொழியும் கிரேக்கு, இலத்தீன் முதலிய மொழிகளும் ஆங்கில மொழிக்கு அணுக்க வியைபு கொண்டிருத்தலின் ஆங்கிலப் பண்டிதர்கள் அவற்றைக் கற்பதிலேயே ஆயுளொடு மனத்திட்ப மிழக்கின்றமையின், தமிழ் முதலிய பாஷைகளைக் கற்பதில் அவர் தங்கருத்து இறங்கிற்றிலது· சிலர் கற்பினும் புராண முதலியனவே கற்பர். தொல்காப்பியம் முதலிய இலக்கணங்களைக் கற்பாரல்லர்.

(பாயிர; பக்: 70)

தமிழ்ப் பாஷைக்கு மாத்திரம் நாவினியற்கையின்படியே இலக்கணமுண்டாயது. மற்றைய பாஷைகளுக்கு அவ்வப் பாஷைகளின் அமைதிக்கேற்றபடி இலக்கணமுண்டாயது. (பாயி: பக்: 88)

தமிழ் இயற்கைமொழி: "இயற்கை நிலப் பிரிவும், இயற்கைக் காலப் பிரிவும், நாவிற்கெளிதாய இயற்கை யொலி வடிவெழுத்தும், கைக்கு எளிதாய இயற்கை வரிவடிவெழுத்தும், இயற்கைச் சொற்களும், இயற்கைப் புணர்ச்சியும் அன்றி வேறு செயற்கையில்லாத காலம் வரையும் இருந்த தமிழ் பழந்தமிழெனப்படும்.

மொழி முதலெழுத்தையும், மயக்கத்தையும், சந்தியெழுத்துகளையும், அய்இ அவ்உ முதலிய வாய்பாடுகளையும், குற்றியலுகர குற்றியலிகரங்களையும், சொற்களின் தோற்றத்தையும் நடுநிலையில் நின்று நன்கு ஆராய்ந்தவர்க்கே தமிழ் இயற்கை மொழி யென்பதும் அது ஆரியத்துக்கு முற்பட்ட தென்பதும் விளங்கி நிற்கும்."

(பாயிரம்: பக்: 79—80)

மணிப்பிரவாளம்: தமிழரும் ஆரியரும் ஒருப்பட்டு நெடிது நாளாயினபின் மணிப்பிரவாள நடையுண்டாயிருத்தல் வேண்டும். மணிப்பிரவாள மென்பதில் மணி யென்பது தமிழ் நடைக்கும் பிரவாள மென்பது ஆரிய நடைக்கும் அமைந்திருத்தலின், அச் சொற்களே அப் பாஷைகளை முறைமைப் படுத்துகின்றன. மணிப்பிரவாளம் செய்யுணடைக்கே உரியது. நான்கடியுள்ள லோர் சுலோகத்தில் முன்னிரண்டடி தமிழ்ச் சந்தமும் பின்னிரண்டடி ஆரியச் சந்தமுமாய் வரலே மணிப்பிரவாள நடையாம். இந்நடை உரைநடைக்குச் சிறிதும் பொருந்தாது. மணிப் பிரவாளமென்பதில் மணி யென்பது முத்து; பிரவாள மென்பது பவளம்."

"மணிப்பிரவாள நடை முதலியவற்றால் தமிழ் ஆரியத்துக்கு முற்பட்டது என்பது அங்கைக் கனிபோல விளங்குகிறது. தமிழ் ஆரியத்துக்கு முற்பட்டது எனக் கூறுவனவெல்லாம் உண்மை கூற வந்ததன்றி ஆரியத்துக்குக் குறை கூறவந்ததன்று."

(பாயிரம்: பக்: 51—52)

"தமிழ் இயற்கை மொழி யென்பதையும், ஆரியம் செயற்கை மொழி யென்பதையும் இவ்வாராய்ச்சி வற்புறுத்துகின்றது. ஆகலின், தமிழ் ஆரியத்துக்கு முற்பட்ட தென்பதற்கு ஐயுறவென்னை?"

(பாயி. பக்: 53)

கார்த்திகேயர் இலக்கண உரையாய்வில் அக்காலத்திலேயே கிளர்ந்த எண்ணுமாற்றலோடு உண்மை கண்டுள்ளார். மொழி நூன்முறைக்கு மாறாகச் சேனாவரையர் கூறிய கூற்றை, அஞ்சாது மறுத்த அறிஞரின் ஆண்மை பாராட்டற்பாலதாம்.

"சேனாவரையர் தமிழ்ச் சொல் வடமொழிகட் செல்லாதென்பர். சத்தநூல் வல்ல ஐரோப்பிய பண்டிதர் தமிழ்ச் சொற்களுட்பல வட

மொழியிலும் சில கிரேக்கு, எபிரேய முதலிய மொழிகளிலும் கலந்துள்ளன என்பர். கால்டுவெல் துரை அக்கா, அடவி. ஆணி, சுடி, கடுகு, மீனம், வலி முதலிய பல தமிழ் சொற்கள் வடமொழியிற் கலந்துள்ளன என்பர். (பக்: 57)

கார்த்திகேயரின் புதுமைக் கருத்து:

F என்னும் உச்சரிப்பு, தமிழிலின்மையாயினும் ஒரோவழி தமிழிற்கு வேண்டியிருத்தலானும், பகரத்தின்கீழ் இரண்டு புள்ளி வைத்து அவ்வுச்சரிப்புக் கொள்ளப்படும். இஃது கன்னட வழக்குமாம்.

(உ-ம்) ப̤ } ஆப்பிரிகா தேசம்.
கிராண்டப் துரையவர்கள்,

புள்ளடி, முற்றுப்புள்ளி முதலியனவும் கவனித்தல் வேண்டும். (புள்ளடி = காக பாதம்) தமிழில் ஆரிய எழுத்துகளைக் கலந்து எழுதற்க. அங்ஙனம் எழுதின் தமிழின் இயற்கைச் சந்தம் குன்றும் (பக்: 81)

கார்த்திகேயர் தமிழின் இசையமைப்பு பற்றியும், பண்டைக் கல்வியமைப்பில் இசை முறையின் சிறப்பிடம் பற்றியும் திட்டமாகக் கூறியுள்ளமை கருதற்குரியதாம்;

“குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தலென்னும் ஐவகை நிலங்களில் அவ்வக் காடுகளில் கிளி, மயில், பருந்து, கோழி, அன்னம், காக்கை முதலிய அவ்வந் நிலத்துப் பறவைகளும், வண்டினங்களும் மகிழ்ந்தினிது பாடுவதும் அப்பாட்டினனே மகிழ்வு பெருகுவதும் இயற்கையாகலின், அவ்வந் நிலத்துள்ள மக்கள் மகிழ்ந்து செவியுற்று அங்ஙனமே தாமும் மெல்ல மெல்ல இசைத்துப் பழகினமையின், உலகத்து முதல் முதல் தோன்றிப் பெருகியது இசைக் கல்வியேயாகும். அவ்விசைக் கல்வியானே நாவானது மெல்ல மெல்லத் திருந்தமுறலால், ஓர்சார் ஒலிவடிவெழுத்துகளும், சில புலனாயின, பிறகு பாஷையின் தோற்றத்திற்கு அவையும் காரணமாயின். (பாயிர: பக் 64)

“வண்டினை யுணர்த்தும் தேனென்னுஞ் சொல்லினின்று இசையை யுணர்த்தும் தென் என்னுஞ் சொல்லுண்டாயிற்று. ‘தென்ன தென’ முதலியனவும், ‘தெனந் தெனந் தெந் தெந் தெந் தெனா’ முதலியனவும் அதினின்றே யுண்டாயினவாம். சங்கீதப் புலவர்கள் அவையிடத்தே ஆலாபனம் செய்வனவெல்லாம், வண்டினது இன்னிசை போல்வன ஆகலின், அவ்வாலாபனச் சொற்களும், அத் தென் என்னுஞ் சொல்லின் சிதைவேயாம். பிறவு முணர்ந்து கொள்க.”

“பண்களாவன் பாலையாழ் முதலிய நூற்று மூன்றென்ப. ஐவகை நிலங்காரணமாக எழுந்த அகப்பொருளும், புறப்பொருளும்,

அவற்றின் பாகுபாடுகளும் அவ்விரண்டன் இயைபுகளும் தமிழ்க்கே யுரியன.

சரிகமபதநி என்ற சத்த சுரங்களும் குறிஞ்சி முல்லை நெய்த லென்னு மூன்று பண்களிலே யடங்கும். எங்ஙனமெனின்: மயிலும் குயிலும் யானையும் குறிஞ்சிக் கருப் பொருளும், எருதும் ஆடும் குதிரையும் முல்லைக் கருப் பொருளும், கிரவுஞ்சம் நெய்தற் கருப் பொருளுமாகலின் என்க.

சத்த சுரங்களினெழுத்துக்கள் சட்ச முதலியவற்றின் முத லெழுத்தாகலின், அவ்வவற்றினொலி அவ்வவ் வெழுத்துக்குங், கொள்ளப்படும் ச-சட்சம் = மயிலொளி, ரி-ரிடபம் = எருத்தொலி க-காந்தாரம் = யாட்டொலி, ம-மத்திமம் = கிரவுஞ்சவொலி, ப-பஞ்ச மம் = குயிலொலி, த-தைவதம் = குதிரையொலி, நி-நிடாதம் = யானை யொலி.'' (பாயிர: பக்: 65)

"நாடக நூல்களுட் கூறப்பட்டுள்ள அத்தபேத விரிவையும் நயனபேத விரிவையும் உணரின், அவை பழந்தமிழ்க்கு முன் ஓர் பாழையு மின்மையானும். நாவாலிசைக்க வலியின்மையானும் மக்கள் தத்தங் கருத்துகளைக் கையாலும் கண்ணாலும் புலப்படுத் தியதை விளக்கற்பாலன. இக்காரணத்தானே நிகண்டு நூலார் தமிழ்க் கூத்தருக்கு 'வாயிலோர்' எனக் கூறுவர் போலும் முன்னர்க் கைக் குறிப்பும், பின்னர்க் கட் குறிப்பும் அதன் பின்னர் ஒலிக் குறிப்பும் உண்டாயின." (பாயிர: பக்: 72)

சொல் விளக்கம்: கோவேறுகழுதை: கழுதை அரசர்க்கு வாகனமாயினமையின் கோவேறுகழுதை யெனப்பட்டது. (பாயிர: பக்: 56)

பற்றுப்பாடு—அபிமானம் (பாயிர: பக். 40)

கல்வியில் இசைமுறை: சிறுவர்கள் கீதமுறைமையைத் தொடக்கத்திலேயே பயில்வதற்குத் தமிழ் நெடுங்கணக்கிலுள்ள எழுத்துகளை, ஆனா ஒனா என்னுஞ் சாரியைகளோடு கூட்டிக் கற்பித் தலும்; படனம், படித்தல், மாணவன் முதலிய சொற்காரணமும், அத்தமிழ் வேதம் இசைப் பிழம்பென்பதற்குச் சான்றும். அச்சொற் களுக்குப் பண்ணோடு கற்றல், பண்ணொடு கற்போன் என்பது பொருள். இவற்றால் இசைக்கல்வியே முதல் முதலுண்டாய தென் பது பெறப்படும். அது பின்னால் விளங்கும்." (பாயிர: பக்: 64)

கார்த்திகேயசின் பல்வகை இலக்கிய நூற்புலமையும், பிற நாட்டு நூற்புலமையும் அன்னார் மேற்கோள் ஆட்சியால் அறிய முடிகிறது. கீழ்க்காணும் ஓரிரு சான்று அவர்தம் புலமை மாட்சி யைப் புலப்படுத்தும்.

"மேற் கூறிய சாகம் சாகள மென்பன வெள்ளாட்டினையும், கங்கம் கங்கத மென்பன சீப்பையும், தருக்கு தன்கு என்பன செருக் கையும், விழல் வீண் என்பதையும் உணர்த்தி நிற்கும். சாகளம்

என்பதை உரிச்சொன் னிகண்டிலும், கங்கம், தன்கு என்பனவற்றைச் சூடாமணி நிகண்டிலும், விழலென்பதைப் பிங்கல நிகண்டிலும் காண்க. விழலின் திரிபே வீணென்பது. நால்கின் திரிபே நான்கென்பது.

கடற்கரையை யுணர்த்தும் புலம் பென்பது ஐங்குறு நூற்றிலும், கரடியை யுணர்த்தும் வெண்பல்லமென்பது உரிச் சொன்னிகண்டிலும், திரட்சியை யுணர்த்தும் அவையம் என்பது மதுரைக் காஞ்சியிலும் மயிலிறகை யுணர்த்தும் மேதகமென்பது சம்பந்தர் தேவாரத்திலும், மயிலிறகை யுணர்த்தும் புத்தகமென்பது மருத்துவ நூலிலும், மூங்கிலை யுணர்த்தும் நாலென்பது சுப்பிரமண்ணிய வைத்திய வெண்பாவிலும, தென்னையை யுணர்த்தும் நாலி யென்பது போகர் நிகண்டிலும், மூங்கினெல்லினை யுணர்த்தும் ஞாங்கலென்பது மஞ்சிகன் ஐந்திணைச் சிறு நிகண்டிலும் உள்ளன. (பாயிர: பக்: 48)

தமிழ்மொழி யாண்டும் பரவ வேண்டுமென்பதும், பிறமொழிப் பெருக்கத்தால் தமிழ் வளம் தாழ்வது தகாதென்பதும் கார்த்திகேயர் கருத்தாகும். தமிழர் தமிழ்ப்பற்றில் தலைசிறந்தோங்க வேண்டுமென்று வேண்டும் பாயிரப்பகுதி உருக்கம் நிறைந்ததாகும்:—

"கoசுசு-இல் ஆங்கில நாட்டில், பிராஞ்சு பாஷையின் வியாபகத்தால் ஆங்கில பாஷை யொடுங்கித் தன்னிலை குலையுங்கால் அக் காலத்துள்ள ஆங்கிலப் பண்டிதர் தம் பாஷையிற் பற்றுள்ளம் வைத்து கஙஎஉ ஆம் வருடமுதல் பண்டைய நிலைமைக்குக் கொடுவர முயன்றனர். அதனாலன்றோ ஆங்கில பாஷை யிக்காலத்து வியாபகப்படலாயிற்று. இவ்வியாபகத்தால் தமிழும் ஒடுங்கித் தன்னிலை குலைகின்றமையின் தமிழரும் தமிழ் கற்றோரும் அவர்போல் பற்றுள்ளம் வைத்து இச்சமயத்திலே தான் அதனை முன்னுக்குக் கொடுவரல்வேண்டும். இக்காலத்தில் அரசாட்சியார் மூலமாயும் தமிழை வளர்த்தல் கூடும். ஆங்கில அரசு நடு நிலையுள்ளது. எத்தால் வாழலாம்? ஒத்தால் வாழலாம். அழுத பிள்ளைதான் பால் குடிக்கும். தாயிழந்த குழந்தைகளையும் பெலங்குன்றினவர்களையும் நோயாளிகளையும் காப்பதுவே தலைபாய அறமாவது போலப் பல வகையிலும் குன்றிய நிலையிலுள்ள தலைசிறந்த தமிழை இத்தருணத்திற் காப்பதுவே தமிழிலே பிறந்து தமிழிலே வளர்ந்து தமிழையே பேசும் தமிழ்ப் பெருஞ் செல்வர்களுக்குத் தலையாய அறமாகின்றது. தமிழர்க்குத் தங்கல் வியே கற்புடை யபெண்டிராகலின் அப்பெண்டிர்க்கு ஓர் குறையும் நேராதபடி காப்பதுவே காதற் கணவனுக்கு உரிமைப்பாடாகின்றது.

"கல்வியே கற்புடைப் பெண்டிரப் பெண்டிர்க்குச்
செல்வப் புதல்வனே யீர்ங்கவியாச்—சொல்வள
மல்லல் வெறுக்கையா மாணவை மண்ணுறுத்துஞ்
செல்வமு முண்டு சிலர்க்கு"—என்றபடி கல்வியேயொருவற்

குக் கற்புடைப் பெண்டிரென்பது உண்மையே. நற்றுயெனினும் கணவனை விட்டுப் பிரிந்து தன் மகனிடத்திருத்தற்குட்ன்படாள், கற்புடைப் பெண்டிர்க்கு ஒரு சிறிதும் மானக்கேடு முதலியன நேரா தபடி காதற் கணவனே காத்தற்குரியோன். அன்னேன் இறந்து பட்டுழி, அக்கற்புடைக் காதலியும் இறந்துபட்டு ஒருங்கு செல்லுந் துணிபுடையள். கற்புடைக் காதன் மகளிர் ஒருங்கு செல்லுதலில் தவறுபடினும் கல்வி ஒருங்கு செல்லுதலில் தவறுபடாது, செல்வத் திற்கு இத்தன்மைகளில. ஆகலின் கல்வி கற்புடைப் பெண்டி ரென்னுது பிரிநிலைப் பொருளும் தெற்றப் பொருளும் ஒருங்கிட்டுக் கல்வியே கற்புடைப் பெண்டிரென்ருர்.

இச்செய்யுள் தம் கற்புடைப் பெண்டிரினும் தலைசிறந்த தமக் குரிய கல்விக்கு ஓர் சிறிதும் குறை நேராதபடி காத்தல் வேண்டு மென்பதை விளக்கற் பாலது." (பாயிர: 77-78)

தமிழின் காதலராய கார்த்திகேயர் மொழியின் தோற்றநிலை பற்றியும், நாவினியற்கை பற்றியும். செயற்கை மொழி—இயற்கை மொழிபற்றியும் இயற்கை யொலி—செயற்கையொலி பற்றியும், இயற்கை எழுத்து—செயற்கை யெழுத்து பற்றியும், ஒலி முறைகள் பற்றியும், தமிழின் இயல்புக்கிசைந்த அமைப்புபற்றியும் பல மேற் கோள்களோடு ஆராய்ந்துரைக்கிருர். சில கருத்துக்கள் தற்கால முற்போக்கான ஆய்வுக்கு முரண்பட்டுத் தோன்றுவது இயல்பே. அவர் சமய உணர்வுக்கு ஆய்வில் முன் முதன்மை தருவதும் அறி வியல் முறை ஆய்வுக்கு ஏற்றதன்று, மொழியியல் வாய்மையை நிலைநாட்ட தேவார—திருப்புழ்ச் சான்றுகளையே பெரிதும் கார்த்தி கேயர் நாடியுள்ளார், தேவார-திருப்புகழ் நூல்களைவிடக் கழகக்கால இலக்கியங்களையும், திருக்குறளையும, தொல்காப்பியத்தையும் சான்ருகக் கொண்டிருப்பின் மேலும் தெளிவும் விளக்கமும் நேர்மை யும் கூடியமைந்திருக்கும்

'மொழி சமயத்தையும் கடந்தது' என்றவுணர்வு இந்நாளில் தெளிவாக உறுதியடைந்தமை போல அந்நாளில் உறுதிபெற வில்லையென்பதனையே இககூற்ருல் அறிகிருேம்,

'இயற்கையைக் கூர்ந்து நோக்கியே மாந்தர் தம்மறிவை வளர்த்து வந்தனர்' என்ற கொள்கையைக் கார்த்திகேயர் விளக்கு வது நனி பொருந்துவதே. அவ்விடங்களில் ஆசிரியரின் நுண் மாண் நுழைபுலம் பெரிதும் பாராட்டற் பாலதாயுள்ளது.

இலக்கணவியலுள், தமிழிலக்கணத்தின் ஒட்பநுட்பங்களும், சிறப்பமைதிகளும், பிற மொழியிலக்கணங்களைவிட மிகப் பண்பட்டுச் சிறப்போடு தமிழிலக்கணம் அமைந்திருப்பதையும், நன்னூல், தொல்காப்பியம் ஆகிய இலக்கணங்களின் அருமை பெருமையும், செய்யுள் வழக்கு உலகியல் வழக்கு என இரண்டையும் தழுவி யிணைத்துத் தமிழிலணக்கணம் நடைபெறுவதையும், மொழியின் எளிமைக்கு இலக்கணம் துணையாவதையுப் நனிவிளக்கமாக இயம்பி

யுள்ளார்; இப்பகுதியில் இன்றியமையாச் சிறப்புடைய சில பகுதிகளை இவண் குறிப்போம்

1. "இன்னும், அக்கல்வி இயல், இசை, கூத்து என மூவகைப்படும். அவை முறையே மனமொழி மெய்கட்குரியன வென்பர். கூத்துக் கல்விதான் உலகத்து முதன் முதலுண்டாயது. பாயிரத்துட் காண்க இயல்—இலக்கணம். இசை—இலக்கியம் இலக்கண இலக்கியங்களைத் தனித்தனிப் பிரிக்கக் கருதுவது, மணியினின்று ஒளியைப் பிரிக்கக் கருதுவது போலாம். அது கூடாமையின் குண குணியென்னும் நீக்கமில் இயைபுடையதாகும்; அதனால். அவை ஒன்றனையொன்று இன்றியமையாவேனும், பொருட்குப் பொருட்குணம் வியாப்பியமாகலின் இலக்கியம் முந்திய தென்க." (இலக்கண: பக்: 67) தோற்றரவு: மக்கட்கு முதல் முதல் இயற்கைப் பொருள்களின் தோற்றமுண்டாய் அறிவு பெருகிய பின் செயற்கைப் பொருள்களின் தோற்றமுண்டாயின. எங்ஙனமெனின்,

சூரியனது தோற்றத்தால் அழகு வண்ண முதலியனவும், சக்கர முதலியனவும், கடற்கரையின் தோற்றத்தால் ஏரிகரை, குளக்கரை முதலியனவும்; ஆற்றினது தோற்றத்தால் கால்வாய், தெரு முதலியனவும், மலையின் தோற்றத்தால் மேடு, கூரை முதலியனவும், பூசனிக்காய் முதலியவற்றின் தோற்றத்தால் நீர்த்தூம்பு முதலியனவும், ஊசல் முதலியனவும், அதன் காதின் தோற்றத்தால் விசிறி முதலியனவும், மூங்கிலின் தோற்றத்தால் உட்டுளை. நீட்சி, உயரம், ஒழுங்கு முதலியனவும், நெருப்பு முதலியனவும், தருப்பையின் தோற்றத்தால் கத்தி முதலியனவும், முட்களின் தோற்றத்தால் ஊசி, ஆணி முதலியனவும்; கருக்கு மட்டையின் தோற்றத்தால் வாள் முதலியனவும், சிந்தில் விழுதின் தோற்றத்தால் நூல் முதலியனவும், மரவுரியின் தோற்றததால் ஆடை முதலியனவும், கடுமர முதலியவற்றின் தோற்றத்தால் கருப்புச்சாய முதலியனவும், தமாலத்தின் தோற்றத்தால் வாசனைப் பொருள் முதலியனவும உண்டாயின. பிறவு மிங்ஙனமே யுணர்ந்து கொள்க" (பக்: 144-145)

..."மடு முதலிய சொற்களைப் போலவே மாடு முதலிய சொற்களையும் உச்சரிக்கின், அது குற்றியலுகர உச்சரிப்பாகாது. சிறிது வேறுபட வுச்சரித்தல் வேண்டும்.

குழந்தைகள் மாடு என்பதை மாட என்ருவது, மாடி யென்ருவது உச்சரிக்குமேயன்றி, மாடு என்று உச்சரிக்க மாட்டா. கொம்பு என்பதையும் கொமபா என்றே யுச்சரிக்கும். குற்றியலுகரம் இதழ் குவித்து உச்சரிக்கவேண்டியிருத்தலின், கடினமாவதுணர்க. கொக்கு என்னும் குற்றியலுகர வுச்சரிப்பினும் கொக்கு என்னும் வல்லின மெய்யீற்றுக்குறிப்பு கடினமாகும். ஆகலின், தமிழில் வல்லின மெய்யீற்று மொழிகளே யில. குழந்தைகள் குரங்கினைக் கொங்கு என்னும் ஒகரத்தில் அகர முணமையின், எளிதாயிற்று. பாக்குப்

பழம்பாக்கு, பூட்டுப் புதுப்பூட்டு என்னுந் தொடரை விரைந்து கூறின், குளறுபடையாம். ஏன்? அங்காந்து இகழ்குவிந்து வரிதா கலின் என்க. குற்றியலுகரம் சொற்குறுக்கத்தை யுணர்த்து வதன்றிச் சொல்லொடு பொருட்கு இயைபுண்மை பற்றிப்பொருளின் குணவடிவுகளின் குறுக்கத்தையு முணர்த்தும் :—

1 பந்து—சிறு துருத்தி, பந்தம்—பெருந்துருத்தி
2 மாடு—அரைவராகன். மாடை—ஒருவராகன்
3 பூட்டு—இறபூட்டு, பூட்டை—செக்கு
4 மறுகு—குறுந்தெரு. மன்றம்—பெருந்தெரு
5 கழுது—வண்டு, கழுதை—கத்தபம்.
6 எறுபு—எறும்பு எறுமபி—யானை
7 அளகு—பறவைப்பெண், அளகம்...பன்றி முள்
8 கச்சு—காற்பலம், கச்சம் மரக்கால்.
(கஃசு)
9 கடுகு—கடுகு. கடுகம்—காரப்பு
10 மார்பு—உரம், மார்பம்—அகலம்

நாகு, புனிறு, கன்று அசறு, கொசுகு முதலியனவுமுணர்க. குணத்திலேனும், வடிவிலேனும் சிறிது பெரிதென்பதைக் குற்றிய லுகரமும குற்றியலுகரமன்மையுமே யுணர்த்தும்.. ... . இக்குற்றியலுகரப் பாகுபாடு தெலுங்கு முதலியவற்றிலில்லை. அகத் தியனார்க்கு முன்னரே செந்தமிழிலுண்டாயிருத்தல் வேண்டும். இது தமிழ் நடைகு இன்றியமையாததே. தொல்காப்பியர் குற்றிய லுகரப் புணரியலென ஓரியல் வகுத்துக் சொண்டதே அது இன்றி யமையாததென்பதற்குச் சான்றாகின்றது." (இலக்கண-பக்: 17-19)

மொழி முதலெழுத்து : மெய்யெழுத்துகளுள் க ச த ந ப ம வ ய ஞ ங என்பவை. இயற்கை யெழுத்துககளும இயற்கை எழுத்து களின் வழிவந்தனவுமாகலின் ; அச் சிறப்புடைமையும் நாவிற் கெளிமையுடைமையும் நோக்கி அவை மொழி முதலெழுத்தாக் கொள்ளப்பட்டன. ல ர ள ழ ட ண ற ன என்பவை, செயற்கை யெழுத்தும் செயற்கை யெழுத்தின் வழிவந்தனவும், அவற்றின் சந்தியெழுத்துகளும் ஆகலின் அச் சிறப்பின்மையும், நாவிற்கு வருத்தமுண்மையும் நோக்கி மொழி முதலெழுத்தாக் கொள்ளப்படா வாயின " (இலக்கண: பக் 22)

"பன்னீருயிரும் க ச த ந ப ம வ ய

ஞ ங வீரைந்துயிர் மெய்யு மொழி முதல் (நன்னூல்:) இவ் வொரு சூத்திரமே தமிழ். ஆரியத்திற்கு முற்பட்ட தென்பதை வலி யுறுத்தற்பாலது. இஃது தமிழ் மொழி யொன்றற்கே சிறப்புச் சூத்திரமாம். ஓர் சிறப்புச் சூத்திரம் ஆயிரம் பொதுச் சூத்திரங்களைத் தள்ளும் !

"'ல ர ள ழ ட ண ற ன என விவையெட்டும் மொழி முதலாகா எழுத்தென மொழிப' என்பது உரைச்சூத்திரம்" (இலக்: பக்: 26)

"பாற்றிரளையுள் மருந்தினை மறைத்துண்பித்துக் குழந்தைகளை வளர்ப்பது போல, அச்செயற்கையெழுத்துகளை யியற்கை யெழுத்துகளினிடையிலேனும கடையிலேனும அமைத்து முதன்மக்கள் நாவினது வன்மையை மெல்ல வளர்த்தனரென்க"

(இலக்கண: பக்: 23)

"உலகத்து முதன்மக்கள் தமது கருத்துகளை, கை முதலியவற்றின் குறிப்பாலும் பின்னர் அவற்றோடுகட்குறிப்பாலும் அதன் பின்னர் ஒலிக் குறிப்பாலும் அறிவித்தும் அறிந்தும் மகிழ்வாராயினர். புள் விலங்கு முதலியவற்றின் ஒலிக் குறிப்பினும் முதன் மக்களது ஒலிக் குறிப்புகள் பன்மடங்கு சிறப்புடையனவெனக் கூறல் வேண்டும, அவ்வொலிக் குறிப்புகளே உலகத்து முதன் மக்களது பாழையாம். அக்காலமே உலகத்துக்குக குழந்தைப் பருவமாகும். குழந்தைகளிளுவிற்கு உயிரெழுத்துகள் எளிமையும மெய்யெழுத்துகள் கடினமுமாம்.

உயிரெழுத்துகளுள்ளும் அகர முதலியன எளிமையும், ஐ ஔ என்பன கடினமும் ஆம். ஐ ஔ என்பவற்றுள் ஐகாரம் எளிமையும ஔகாரம் கடினமுமாம்"

(இலக்கண: பக்: 23)

எழுத்து ; "அகரத்தை யெழுதத் தொடங்குங்கால் வலம் போதலால், தமிழெழுத்துகள் வலம்புரி யெனவும். அவையே சிறந்தனவெனவும கொள்க. இடம்புரிச் சங்காயிரத்து நடுவே வலம்புரிச் சங்கிருத்தலானும், வாழைக் குருத்து நந்தியாவட்டப் பூ முதலியன வலமாக முறுக் கவிழ்கின்றமையானும. கோள்கள் அந்நடை பெறுகின்றமையானும் பாம்பு முதலியன வலம்பட வட்டித்துக் கண்டுயிலச் செய்கின்றமையானும், வலமபுரியே சிறந்ததென்க.

அவ்வலம்புரியாற் பயன் என்னெனின் அது இயற்கை நிகழ்ச்சியாகலின் எழுதுதற்கு எளிதாதலே பயனென்க.

அற்றேல், தமிழெழுத்துகளுட் சிறுபான்மையும். தெலுங்கெழுத்துகளுட் பெரும்பான்மையும இடம்புரியாயவாறென்னெனின், வலம்புரியாக எழுதி எழுதிப் பயின்றபின் அங்ஙனமாயிற்று. இவ்வரிவடிவு. ஒலிவடியுண்டாய நெடிதுகாலத்துக்குப் பிறகுண்டாயிருத்தல் வேண்டும்"

(இல: பக்: 30)

"ஓலைக் கணக்கு" அய்யரென்பது ஓலைக்கணக்காயனென வாய்க் கற்பிக்கும் ஆசிரியரை யுணர்த்தும்· அய்யர்—ஆசிரியர்

"கற்ற தூஉமின்றிக் கணக்காயர் பாடத்தால்
பெற்றதாம் பேதையோர் சூத்திரம்" என்பதில் கணக்காயர் என்பது ஓலைக் கணக்காயர் என்பதன் முதற்குறை."

"முடங்கலென்பது மூங்கிலையும், மூங்கின் மடலையும், பனையேட்டினையுமுணர்த்துப. சுவடி யென்பது சுவடென்னும் சொல்லிற் பிறந்ததாகலின், பனையேட்டின் கட் சுவடுபட எழுதப்படுவதென்பது பொருள்."

(பக்: 33 — இலக்கணவியல்)

"இன்னும் அக்காலத்தில் பூர்சபத்திரத்தில் குங்குமம், பச்சைக் கற்பூரம் முதலியவற்ருற் கூட்டப்பட்ட குழம்பினுலே எழுதி வந்தனர்."

(இலக்கண: பக்: 34)

ஆய்தவெழுத்தினது வடிவே வடிவாக அகரவெழுத்துப் புலப்படலான், எல்லா வெழுத்துகளும் வட்டெழுத்தாய் வேறுபட்டன என்பர். வரியென்பதற்கு வடடெழுத் தென்பதே முதற் பொருள். வரிதல் வரைதல் என்பனவும் அப்பொருளன. வட்டெழுகது விரைவு முதலிய காரணத்தால் கோலெழுத்தாயிற்று; வட்டெழுத்தினும கோலெழுத்தினும் சதுரெழுத்தெழுதல் கடினமாகும். முடங்களில் ஆணிகொண்டெழுதல் அதனினுங் கடினம். இக்கடினப்பாடு நெடிதுகாலமாக எளிதுபட நடைபெறுகின்றமையின், அது தொன்றுதொட்ட பயிற்சியை விளக்குகின்றது. இவையெல்லாம் தமிழ் பழமையான தென்பதற்குச் சான்ரும்.

தெலுங்கெழுத்துகள் வட்டவடிவமாக அமைந்திருத்தலே அக்காலத்துத் தமிழெழுத்துகள் வட்டமாக அமைந்திருந்தன என்பதற்கு ஓர் அறிகுறியாம். எனவே தமிழெழுத்துகள் வட்டவடிவமாக அமைந்திருந்த காலத்துத் தெலுங்கெழுத்தாக்கப்பட்ட தென்க. கன்னட வெழுத்தும் தெலுங்கெழுத்துப் போலாம்; மலேயாள வெழுத்து, கன்னடத்தை யொக்கும்; தமிழின் மருஉ வாகிய வெழுத்தை நோக்கின், எழுத்தெல்லாம் முதலில் ஆய்த வெழுத்துப் போலவே வட்டவடிவாக இருந்தனவென்றே கொள்ளல் வேண்டும்.

முதல்முதல் அ, இ. உ என்பவை முறையே ஃ, oo o — இங்ஙனமிருத்தல் கூடுமெனக் கருதுகின்றனம் ஃ̣, %. o — முறையே ஆகார ஏகார ஊகாரமாம் பிறகு ஈகாரம் 'ஈ' — இங்ஙனம் வேறுபட்டதில் பிறவுமுணர்ந்து கொள்க.

(இலக்கண: பக்: 31—32)

"அக்கம், அச்சம், அண்ணன், அத்தின், அப்பன், அம்மை, அய்யன் முதலிய உடனிலை மெய்ம்மயக்கச் சொற்கள் நாவிற் கெளிமையாதலும்; கங்கன், கந்தன், வெட்கம், வண்டு, கன்று, கம்பம், வீழ்ச்சி முதலிய வேற்றுநிலை மெய்ம்மயக்கச் சொற்கள், அத்துணை யெளிமையாகாமையு முணர்க.

தமிழிலுள்ள அம்மை, அப்பன், அண்ணன், அத்தை முதலிய முறைப் பெயர்கள், உடனிலை மெய்ம்மயக்கச் சொற்களாக அமைந்திருக்கின்றன

இவையெல்லாம் தமிழ் உலகம் குழந்தைப் பருவமாக இருந்த காலத்து உண்டாயதென்பதை வற்புறுத்துகின்றன.

(இலக்கண: பக்: 35)

"மயங்குவன இயற்கை யுச்சரிப்பு எனவும், மயங்காதன செயற்கை யுச்சரிப்பெனவும் அறிந்து கொள்க.

ஆரியத்துள் மயங்காதன அளவிறந்தன. மயக்கமெனினும் கூட்டமெனினு மொக்கும். (இலக்கண: பக்: 36)

"தமிழில் ஆண்பால், பெண்பால் முதலியவற்றைச் சொல்லாலே யறிதல் கூடும். வடமொழியில் பொருளுணர்ந்த பின்புதான் பாலறியலாகும்." (இலக்கண: பக்: 107 — சொல்)

மற்றும் 'சு', 'சுல்' என்ற ஓசையினின்று சொற்கள் தோற்றிய தென்றும், வட்டம் சுழியே மொழியின் முதற்றோற்றக் காரணமென்றும இன்ன பிற வியன்பெருங் கற்பனை வள ஆய்வு நூலில் பரந்திருக்கின்றது. மூங்கில் வேர்ச் சொற்கள் பற்றிய ஆய்வு மிகப் பெரியது இக்கருத்துக்கள் மீண்டும் ஆய்ந்து அறிவிக்கத் தகுவனவாம்.

கார்த்திகேயர் நல்ல செய்யுட்களியற்றும் திறனுடையவர் என்பதை அவருடைய இடைப்பிறவரற் பாக்களான் அறிகிறோம்.

நூலின் தோற்றம்பற்றிக் கார்த்திகேயர் தாமே பாடிய பாவால் அறிவிக்கிறார்.

"வயின் வயின் வண்டமிழ் வளாகத் திசையுண
வெயினுழை யுங்காற் குயினுழை சோலைசூழ்
கச்சியுட் செலலுபு களிந்தென வருகையில்
மெச்சுறு புனற்கான் மிளிர்பா லாற்றுண்
மட்டைவா யொருவன் மடுத்தனன் கூழினை
மட்டைச்சொற் காரணம் வந்தது மனக்கண்
மடைமுத லாய்வழகரும் விளங்கின
இடைவிடா திங்ஙன மெல்லாச் சொல்லையும்
அறிவுறல் வேண்டுமென் றகத்துக் கொளீஇப்
பொறிமிகு நாமகட் போற் றெடுத்தனமே"

முதனிலையியலின் முதற்பாட்டுள் சொல்லாராய்ச்சியின் சிறப்பையும் அருமையையும் தெளிவுறுத்தியுள்ளார்.

"தமிழ்க்கே நாளுந் தவஞ்செய்து செய்தூங்
கமிழ்தென வுண்ணு மரும்புல வீரர்காள்!
ஒவ்வோர் சொல்லின் ஒளிர்முத னிலையைச்
செவ்வன மோரிற் றிகழுமக் காரணம்
வரையினைக் கல்லி மணிபெற லெளிதாம்
உரையினைக் கல்லி யுணர்வதோ வரிதே
மற்றது கல்லின் வறப்பினும் வறக்கும்
சொற்றொறுங் காரண ந் தோன்று திருந்தில
கல்லினை வல்லே கல்லுத லாகும்
சொல்லினைக் கல்லப் பல்லவா நாள்கள்
பல்ல வாயினும் படுபயன்
எல்லையில் லாவா மின்பமும் பெரிதே"

முதனிலையியலில் கதிரவன் - வட்டம் - சுல் - என்பன; மூங்கில் சொற்கள் என்பன அடிப்படையாகத் தோன்றிய வேர்ச் சொற்களையும், வேர்ச் சொற்களினின்றுங் கிளைத்த பல்வேறு பெயர், வினை,

இடை, உரிச்சொற்களையும் முறைப்படுத்தி வரைப்படுத்தி விளக்கியுள்ளார். இன்றைய மொழியியலார்க் கெல்லாம் முன்னோடியாக. வழிகாட்டியாகத் தமிழ்ச்சொற்கள் வேர்ச்சொற்கள் ஆய்வில் ஈடுபட்ட கார்த்திகேயரின் நூலின் இறுதி வெண்பா இஃதாம்:

"சுள்ளென் றெரிக்குஞ் சுடரோன் பால்தோன் றியுயிர்
உள்ளந் துலக்கி யுலாவலின் - தெள்ளுபுகழ்ப்
பண்டைப் பெரியார் தாம் பைந்தமிழை ஒண்டமிழ்
ஒண்டமி ழென்மனு ரோர்ந்து."

தன்னேரிலாத் தண்டமிழின் தோற்றமும் ஏற்றமும் ஊற்றமும் தெள்ளெனக்காட்டித் தூங்கிக் கிடந்த தமிழ் கூறு நல்லுலகில் மொழிவீறுணர்ச்சி யூட்டிய 'கறசைகிழாரியற்றிய மொழிநூற் சுருக்கம்' என்றும் நின்று நிலவும். அந்நூலைத் திருத்தமும் பொருத்தமுமுடையதாகப் புதுக்கிச் சீர்திருத்தப் பதிப்பாக வெளியிடுதல் இன்றியமையாததாம்

† 'ஆயிரம் மூளையின் எண்ணுமாற்றலும், பத்தாயிரம் நாவின் பேச்சும், ஒருநூற்ருண்டு எழுத்தும் சேர்ந்துழைத்துருவாக்கியது போன்ற விரிவான ஆய்வுநூல் கார்த்திகேயரின் மொழிநூல்' எனப் பூர்ணலிங்கனூர் போற்றுவதை நாமும் உடன்பட்டுப் போற்ற முனைகிரேம்

'இடைக்கால உரைநடைத் தமிழ்த் தொண்டு' ஆய்வில் மாகறல் கார்த்திகேயரின் மொழிநூல் முதலிடம் பெறுவதுறுதி வளரும் கொழிதமிழ்க்குப் புதுக்குருதிக் கொடைநல்கிய தமிழ்ப் பேரறிஞர்கள் தமிழுலகின் நெஞ்சுவந்த நன்றிக்குரியராவர். அத்தகு தன்னலங்கருதாத் தண்டமிழ்த் தொண்டர்கள் குழுவில் மொழிநூல் முதல்வர் கார்த்திகேயரும் ஒளிவீசித் திகழ்கிருர்!

---

† On the whole, the Mozhi Nool which is but a prelude to the author's magnum opus which he has mapped out, is a veritable mine of rare and useful information and publishes the fruits of a life study. It is a work sure to set a thousand minds a-thinking tenthousand a-talking, and atleast a century of able pens-a-writing. Such a wonderful activity of minds, tongues, and pens, if induced by this epoch-making production, plentiful crop of literature on the subject and eternize the name and fame of this precedent-breaker, this fearless thinker and original researcher, this assertive and positive character on the bead-roll of dutiful champions, able expositors, acute critics, and sincere adorers of their mother-tongue.

(மொழிநூல் முன்னுரை) — *M. S. Puranalingam Pillai.*

295-ஆம் பக்கத் தொடர்ச்சி)

வாள் வழங்கிய வாழ்வு

கு. சிவமணி.

(காட்சி–2–தொடர்ச்சி)

ஒருவர் : உண்மையாகவா ?

நாக : நான் ஏன் பொய் சொல்லப்போகின்றேன் ?...சில நாட்களாகவே அரசருக்கு மனம் சரியில்லை......எதிலும பற்று இல்லை...இந்த அரசியலையே துறந்து சென்றுவிடவேண்டும் என்று கூறியதாகக் கேள்வி...வேண்டுமானால் இளவரசைக் கேட்டுப்பாருங்கள்.

ஒருவர் : இளவரசே ! நாகன் சொல்வது உண்மையா ?

(இளங்குமணன் 'ஆமாம்' எனத் தலையசைக்கிறான்.)

ஒருவர் : ஐயோ ! அரசே ! உங்கள் கதி இப்படியா ஆகவேண்டும் ?

நாகன் : பெருமக்களே ! இனியும் நாம் கண்ணீர் சிந்திக்கொண்டிருத்தல் கூடாது நம்மரசரின் எதிர்பாரா முடிவை மாற்றார் அறிந்தால் நம்மீது படை எடுத்து வருதல்கூடும், ஒற்றர் மூலமாக இச்செய்தி இந்நேரம் அவர்கட்கு எப்படியும் எட்டி இருககலாம் , ஆகவே. நாம் செய்யவேண்டுவது இளவரசரை உடனே அரசராககுவதே ஆகும்.

இளங்குமணன : நாகா ! வெந்த மனத்திலே வேலை நுழைக்காதே ! இனி நான் ஏன் உயிரோடு இருக்கவேண்டும் ? அருமை அண்ணனைப் பிரிந்த பின்னர் எனக்கேன் இந்த வாழ்வு ? (சிறிது கழித்து) அண்ணா ? அண்ணா ? நீங்கள் சென்ற இடத்திற்கு இதோ நானும் வந்துவிடுகின்றேன்.

(இடையிலிருந்த உடைவாளை உருவுகிறான்—அதற்குள் நாகன் தடுக்கிறான்).

நாக : அரசே ! என்ன இது? தாங்கள் இந்த முடிவுக்கு ஒருபோதும் வரக்கூடாது. இனிமேல் தாங்கள்தான் இந்நாட்டைக் கண்ணிமைபோலக்காத்து வரவேண்டும், வள்ளல் குமணர் எங்கோ சொல்லாமல் சென்றுவிட்டார். இந்த நேரத்தில் தாங்களும் இந்த முடிவிற்கு வந்தால் அமைதியற்றுத் தவிக்கும் குடிமக்களுக்கு யாரால ஆறுதல் சொல்ல முடியும்?

ஒருவர் : ஆகா ! அண்ணன் தம்பி உறவென்றால் இப்படியல்லவா இருக்கவேண்டும.

ஒருவர் : அரசரில்லா நாடு அன்றே அழிந்துபடும், இளவரசே ! தங்கள் துன்பமே எங்கள் துன்பம்.

நாக : பெருமக்களே ! அரசரைப் பிரிந்த துக்கத்தில் இளவரசர் ஏதாவது தற்கொலை செய்துகொள்ளலும் கூடும். ஆகவே அவர்மீது ஒரு பொறுப்பைச் சுமத்திவிட்டால் அதிலிருந்து அவர் தப்ப முடியாது ?

ஒருவர் : அதற்கென்ன செய்வது ?

நாக : இளவரசர் இளங்குமணரை உடனே அரசராக்கவேண்டும். அவ்வாறு செய்துவிட்டால் அவர் மக்களுக்காற்றவேண்டிய கடமையிலிருந்து தப்பவே முடியாது.

இ கு : பெருமக்களே ! இந்த அரசு வாழ்வைச் சுமக்கும்படி என்னை வற்புறுத்தாதீர்கள். வேண்டாம். வேண்டவே வேண்டாம்.

நாக : நாடுகாக்கும் மன்னர் குலத்திலே தாங்கள் தோன்றியதால் மக்களுக்குத் தாங்கள் ஆற்றவேண்டிய கடமை அது.

ஒருவர் : இவருக்கும் குமணர்பால் எவ்வளவு பேரன்பு !

ஒருவர் : உடன் பிறப்புணர்வல்லவா ?

ஒருவர் : தாங்களே இந்த நேரத்தில் அரசுரிமையை ஏற்க வேண்டும். இதுவே எங்கள் வேண்டுகோள். அதை மறுக்காது தாங்கள் நிறைவேற்றியருளவேண்டும்.

இ. கு : அண்ணன் இருந்து ஆண்ட அரியணையிலே நான் அமர்வதா ?

ஒருவர் : கலங்காதீர்கள். சென்று அமருங்கள்.

இ. கு : தங்கள் விருப்பப்படியே ஆகட்டும் (அரியணையில் அமர்கின்றான்.

நாக : அரசர் இளங்குமணர் !

அனைவரும் . வாழ்க !

(காட்சி முடிவு)

காட்சி—3.

இடம் : நாட்டையடுத்த காடு.
உறுப்பினர் : பெருஞ்சித்திரனார், பெருந்தலைச்சாத்தனார்.
நிலைமை : பெருந்தலைச்சாத்தனார் மிகவும் வருத்தத்தோடு உலவுகின்றார்.

பெருந்தலைச்சாத்தனார் : (தனிமொழி) ஐயோ புலமை வாழ்வு எவ்வளவு கொடியதாக உள்ளது ? பசித்து அழும் பாலகன் தாய் முகம் நோக்க; தாய் என் முகம நோக்க, நான் யார் முகத்தை நோக்குவேன்.

(இதைக் கேட்டுக்கொண்டே பெருஞ்சித்திரனார் நுழைகின்றார்.)

பெருஞ்சித்திரனார் : யாரங்கே? (அருகில் வந்து) நண்பர் பெருந்தலைச்சாத்தனாரா? வணக்கம் நண்பரே!

பெ. சா: புலவர் பெருஞ்சித்திரனாரே! வணக்கம்.

பெ. சி: ஏன் சோர்வோடு காணப்படுகின்றீர்?

பெ. சா: புலவராகப் பிறந்தவர்க்குச் சோர்வைத்தவிர மகிழ்ச்சி ஏது?

பெ. சி: நண்பரே! வரையாது கொடுக்கும் வள்ளல் குமணன் இருக்கும் வரையில் துன்பம் நாமை என்ன செய்துவிடமுடியும்?

பெ. சா: ஆம்! ஆம்! இரப்போர்க்கீயும் வள்ளல் குமணன் நினைவே எனக்கு வரவில்லை.

பெ. சி: சாத்தனாரே! நானும் உம்மைப்போல் பசியால் மெலிந்து; வறுமையால் வாடி வள்ளல் குமணனை அடைந்தேன். என்பால் கொண்ட பேரன்பினால்தான் எனக்கு எளிதில் விடை கொடுக்கவில்லை. முடிவில் எனது குடும்ப நிலையை எடுத்துச் சொன்ன பின்னரே எனக்குப் பிரியா விடை கொடுத்தான் குமணன் எனக்கு உணவு தந்தான்! உயிர் தந்தான்!! ஊரார் போற்றும் பெருவாழ்வைத் தந்தான்!

பெ. சா: அப்படியா?

பெ. சி: பொன் தந்தான்; புவிபோற்றும் வாழ்வு தந்தான்; களிறு தந்தான்; அவற்றைக் காக்கும் செல்வத்தினையே தந்து பெருமை செய்தான்.

பெ. சா: அப்படி என்றால் நானும் இப்போதே குமணன்பால் விரைந்து செல்வேன்.

பெ. சி: அப்படியே செய்யும். உமது துன்பம் ஒழியும்.

(காட்சி முடிவு)

காட்சி—4.

இடம்: காடு.

உறுப்பினர்: குமணன். முத்தழகன். புலவர்.

நிலைமை: குமணன் சிந்தனையுடன் உலவுகின்றான்.

குமணன்: (தனிமொழி) ஐயோ! என் தம்பியின் நல்ல மனத்தில் யாரோ நஞ்சைக் கலந்துவிட்டனரே! அதனால்தான் அவன் என்னையே பழிவாங்கத் திட்டமிட்டான்......... நல்லவேளை! ......அமைச்சர் மதிவாணரும் மெய்காவலன் முத்தழகனும் இல்லையெனில் இப்போது இருட்டறையில் கிடந்து இன்னலுறுவேன்......நாட்டு நிலையறிந்துவரச் சென்ற முத்தழகனையும் இன்னும் காணோமே! (முத்தழகன் நுழைந்து வணங்குகிறான்.)

முத்: வணக்கம் அரசே!

கும: முத்தழகா! தம்பி எப்படியுள்ளான்?

முத்: இருக்கின்றார். கொடுமையின் உருவமாக!

கும: உண்மையாகவா?

முத்: இரக்கமில்லா அரக்கர். பழிபாவத்திற்கஞ்சாக் கொடுங்கோலர். நன்மரத்தில் பழுத்துவிட்ட நச்சுக்கனி. அரசே!

நாட்டில் தான் தங்களை வாழவிடவில்லை. இந்தக் காட்டிலும் தாங்கள் உயிரோடு இருக்கக்கூடாது என்று முடிவுகட்டி விட்டனர் கயவர்கள். தங்கள் உயிருக்கே கேடு சூழ நினைதது்த் தங்கள் மீது குற்றங்கள் பல சுமத்தியுள்ளனர்.

கும : அந்தோ ..மறந்தும் பிறருக்குக் கேடு நினைத்தறியா என்மீதா குற்றச்சாட்டுக்கள் ? கேட்கவே நெஞ்சம் நடுங்குகிறது.

முத் : தங்கள் தலைக்கே விலைகொடுக்க எண்ணி உள்ளனர்.

கும : அடுக்கடுக்காகக் கொடுமைகளைக் கேட்பதைவிட ஆவியைப் போக்கிக் கொள்ளலே மேல்...(கத்தியை உருவுகிருன். முத்தழகன் தடுக்கிருன்).

முத் . அரசே! சற்றுப் பொறுமையாக இருங்கள். கொடுங்கோன்மை நீண்டநாள் நிலைக்க இயலாது . முடிவில் அறமே வெற்றிபெறும். (புலவர் பெருந்தலைச்சாத்தனர் நுழைகின்ருர். புலவரைக் கண்டதும் மகிழ்ந்து குமணன் அவரை வரவேற்கின்ருன்.)

கும : புலவர் பெருந்தலைச்சாத்தனரே ! வணக்கம். வருக வருக.

பெருந் : வாழ்க குமண ! வரையாது கொடுக்கும் நின் வள்ளன்மை மேலும் வளர்க.

கும : முத்தழகா ! புலவர் பெருமானுக்குப் பழங்கள் கொண்டுவா. (முத்தழகன் உள்ளே செல்கின்ருன்).
நெடுந்தூரம் வழி நடந்த இளைப்பால் தாங்கள் களைத்துப் போயிருககின்றீர்கள். சற்று ஓய்வு கொள்வதுதானே !

பெருந் : (பெருமூச்சுடன்) பைந்தமிழ் ஆயும் புலவர்களின் வாழ்வு, என்றும் தொல்லையால் நைவது தானே! என்றும் நீங்கா வறுமை, புலவரின் சொத்து! பொறுமை அவருக்குச் சுற்றம் ! நற்றமிழ் ஒன்றுதான் அவர் துன்பந்துடைக்க உதவும் உயிர்த் தோழன்.
(முத்தழகன் ஒரு வட்டிலில் பழங்கள் கொண்டுவந்து வைக்கின்ருன். அவற்றைப் புலவருக்குக் குமணன் கொடுக கின்ருன்.)

கும : பெருமானே ! வருத்தம் ஒழிக.

பெருந் : வள்ளலே! நின்பால் அடைந்தோர்க்கு வருத்தம் ஏது ? எனது வீட்டு அடுப்பிலே காளான் பூத்தது உடம்பு மெலியும் பசியால் என் மனைவி வருந்தினள்; பாலற்றமையால் என் னருமைப் பிள்ளை அழுதான். அவன் தாய் முகம் நோக்க அவள் என் முகம் நோக்க; நான் உன் முகம் நோக்கி வந்தேன் ... ...நீ இரப்பாரது இன்மையைத் தீர்க்கும் பெருங் குடியிற் பிறந்தாய். எனது வறுமை நிலை இது! நினது வள்ளன்மைக்கு எல்லை ஏது ?

குமணன் : (கண்கலங்க) புல்வர் பெருந்தகையே...(அமைதி).

முத் : புலவர் பெருமானே ! வள்ளல் குமணரை அவர் இளவல் வஞ்சித்துவிட்டார். சூதினல் நாட்டைக்கவர்ந்துகொண்டு தமையனைக் காடேகச் செய்துவிட்டார். அரசிழந்து, அருமை பெருமை இழந்து ஆருயிர் நண்பர் இழந்து: வரிசை பல

கொள்ளும் சிறப்பிழந்து, முதிரமலைக் காவலர் வாடுகின்றார். உங்களுக்குப் பரிசு தர அரசரிடம் பொருள் ஏது ?

பெருந்; (திடுக்கிட்டு) வருத்திப் பொருள் வாங்கும வழக்கம் புலவர் பெருமக்களிடம் இல்லை குமணா! உனது நிலையறியேன்; ஆகவே எனது நெஞ்சம் உரைத்தேன். நல் மனங்கொண்ட நின்னிளவல் நச்சுச் செயல் சூழந்தான் என என்னுள்ளம் நம்ப மறுக்கின்றது

முத்: இளங்குமணர் நல்லவர்தான்: அவரை அடுத்துக்கெடுத்து விட்டான் நாகன் என்னும் கொடியவன்.
வள்ளல் ஆண்ட நாட்டிலே இல்லாமை! அறம் ஆண்ட இடத்தில் மறம்!...முடிவில் தமையனின் தலைக்குப் பொன்னை விலையாக வைத்துள்ளார்!.. ...தலைக்கு விலை......

பெருந். கேட்பதற்கே நெஞ்சம் நடுங்குகின்றதே! ஞாயிறே இருண்டாலும, குளிர் நிலவே சுடுகதிர் பொழிந்தாலும்; நெடுங் கடலே நீர்மை குன்றினாலும் வள்ளல் குமணனின் நல்ல மனம மாறவே மாறாது. வள்ளலின் தலைக்கா விலை!.. இன்றே அவனிடம் செலவேன். அவனது அடாத செயலை எடுத் துரைத்து அவனை நலவழிச் செலுத்துவேன்...

குமணன் : புலவர் பெருமானே! எனது தலைக்கு என்னிளவல் விலை கூறியதும் நன்மைக்குத்தான். (இடையிலிருந்த வாளை உருவி) இதோ, வாள்! எனது தலையை வெட்டி என் தம்பி யிடம் காட்டுங்கள், உங்களுக்கு வெள்ளம் வெள்ளமாகப் பொன்னை அள்ளித்தருவான் ...இதோ! (வாளை நீட்டுகின்றான்.)

முத் : அரசே! சற்றுப்பொறுங்கள்.

கும : முத்தழகா! இனிப்பொறுப்பதற்கு இல்லை.
தமிழ் வாழ; தமிழ்ப்புலவர் வாழ்வுபெற எனது தலையை மகிழ் வுடன் தருகின்றேன். (புலவரிடம் வாளை வற்புறுத்திக் கொடுக்கின்றான்).
(குமணன் கீழே மண்டியிட்டுத் தலை குனிகின்றான். சிறிது அமைதி. புலவர் கண்ணீர் பெருக்குகின்றார். இரு கண்ணீர்த் துளிகள் குமணனது கழுத்தில் விழுகின்றன. அவன் நிமிர்ந்து பார்க்கின்றான்)
பெருமானே! அழுகின்றீர்களா ?

பெருந்: (வாளை கீழே வீசி எறிந்து) எழுந்திரு, குமணா! எழுந்திரு. (குமணன் எழுகின்றான். அவனைத் தழுவிக்கொள்கின்றார்) கார்மேகம் கண்டு, களிநடம புரிந்த கோல மயிலுக்குக் கலிங்கம் நலகினான் ஆவியர் பெருமகன் பேகன்; நறுமணம் வீசும் முல்லை மலர்க்கொடி படரத் தனது மணி ஆடும் நெடுந் தேரையே நல்கினான் பறமபிற்கோமான் பாரி; புரவியொடு தேரை இரவலர்க்கு ஈந்து மகிழ்ந்தான் மலையமான் திருமுடிக காரி; குறுமபொறை நன்னாடு கோடியர்க்கீந்த பெருமை யுடையவன் வல்வில் ஓரி; நெடுநாள் வாழ வைககும் செவ்விய நெல்லிக்கனியைப் புலவர் ஔவைக்குக் கொடுத்துச் சொல்

மாலை அணிந்தான் அதியமான் நெடுமான் அஞ்சி; வறியார்க்கெல்லாம் துளிமழையின் வளம்போன்று வரையாது கொடுத்து நிறை புகழ் கொண்டான் நளிமலை நாடன் கண்டீரகோ பெருநள்ளி; பெறற்கரிய நீலக்கலிங்கத்தை ஆலமர் செல்வற்கு அணிந்ததுடன் மோசி எனும் புலவராற் பாராட்டப்பெறும் சிறப்புப் பெற்றான் ஆர்வ நன்மொழி ஆய் அண்டிரன்; கடை ஏழு வள்ளல்கள் தம் உடைமையைக்கொடுத்து உயர்ந்த பெரும்புகழ் கொண்டனர். ஆனால், குமண வள்ளலே! நீ உயிர் கொடுக்கத்துணிந்தாய், தமிழ்ப்புலவன் வாழ நினது தலையையே கொடுக்க முன்வந்தாய் நின்போன்ற வள்ளல் முன் பிறந்தாரில்லை.

செயற்கரிய செய்த பெரியோய்! சிறு மதி படைத்த நின் னிளவலை நன்னெறிப்படுத்தி நின்னோடு சேர்ப்பதே இப்போது எனக்குற்ற பெருமபணியாகும்: (கீழே கிடந்த வாளை எடுத்துக் கொண்டு) நான் வளம் பெற இந்த வாளைக் கொடுத்தாய் இந்த வாளே உனக்கு வாழ்வும் வளமும தரப்பயன்படும்.

நாடிழந்து காடடைந்து வாழ்ந்தபோதும்; தேடிவந்த புலவனுக்கு இல்லை என்று சொலலாது தலையையே கொடுக்கத் துணிந்தாய்! அதனால் மலைபோலும் நிலையான புகழ் கொண்டாய்! மாபெரும் வள்ளல் குமணா! உனது கொடைத் திறம் தண்டமிழ்போல் என்றும் வாழ்க! ஈடும் எடுப்புமற்று இவ்வுலகில் நிலைபெறுக. (வாளுடன் புலவர் செல்கின்றார்).

(காட்சி முடிவு)

காட்சி—5.

இடம் : அரண்மனை.
உறுப்பினர் : இளங்குமணன், காவலன்.
நிலைமை : இளங்குமணன் இருக்கையில் அமர்ந்துள்ளான். அப்போது காவலன் விரைவாக நுழைகின்றான்.

காவலன் : அரசே! வணக்கம். தங்களைக் காண வேண்டிப் புலவர் ஒருவர் வந்துள்ளார்.

இ கு : (சிந்தனை செய்கின்றான். சிறிது அமைதி) வந்தவர் யாரென்று சொன்னாய் ?

காவ : புலவர்.

இ.கு : (ஏளனமாக) புலவரா ? எதையாவது பாடிப் பரிசு பெற வந்திருப்பார்...

காவ : ஆணையிட்டால் அழைத்து வருவேன்.

இ.கு : புலவரை இப்போது பார்க்க முடியாதென்று சொல் ; அவரது பாடலைக் கேட்க எனக்கு நேரமில்லை ...

காவ : புலவரைப் பார்ப்பதற்கே அச்சமாக இருக்கின்றது.

இ.கு : மூடா! காட்டுப் புலிக்கே அஞ்சாத நீ வெறும பாட்டுப் புலிக்கு அஞ்சலாமா ?

காவ : ஏடும் எழுத்தாணியும் சுமந்து வந்திருந்தால் அஞ்சவேண்டிய நிலையில்லை ; அவர் உருவிய வாளும் கையுமாக நிற்கின்றார்.

இ.கு : (வியப்புடன்) என்ன ! ஓலை தாங்கும் கை வாளைத் தூக்கும் வலுப்பெற்றுள்ளதென்றால் அவரது வருகையில் தனிச்சிறப்பு இருக்கத்தான் வேண்டும்... உடன் அவரை அழைத்து வா... ஓடு ! (காவலன் நீங்குகின்றான்.)

(தனிமொழி) ... இந்த நாகன் எங்கே தொலைந்தான் ? அவனிருந்தால் நிலைமைக்கேற்றவாறு நடந்து கொள்வான் ; புலவருககு நான் பொன் தரும் வழக்கமில்லை என்பதை வருபவர் முன் கூட்டியே அறிந்திருப்பாரோ ? புலமையுடன் போரும் செய்யத்தெரியும் என்பதைக் காட்டத்தான் வாளுடன் அவர் வருகின்றாரோ ? ... வரட்டும் ...

(இளங்குமணன் உலவுகின்றான் ; புலவர் பெருந்தலைச்சாத்தனார் ஒளிவிடும் வாளைக் கையிலே கொண்டு நுழைகின்றார்,)

பெருந்தலைச் சாத்தனார் : (சினத்துடன்) நீதான் இளங்குமணனா ?... நீதான் இந்நாட்டின் காவலனா ?

இ.கு . இந்நாட்டின் அரசர் யார் என அறியாப்பிள்ளையைக் கேட்டால் கூட அது சொல்லும். "நாம்" என்று ; .. அப்படியிருகக அஞ்சாது எம்மை நோக்கி இந்த வினாவை விடுக்கும் நீர் யார் ?

பெரு : அருந்தமிழ் பேணும் பெருந்தலைச்சாத்தன் நான் ....

இ.கு : வந்த வேலை ?

பெரு : வந்த வேலை ; ... உறைந்த குருதி இந்த வாளில் படிந்திருப்பது உனக்குத் தெரியவில்லை ? (வாளை இளங்குமணன் பார்க்கின்றான்):

இ.கு : குருதிக்கறை ! ... கொலை செய்யக்கூட உமக்குத் துணிவுள்ளதா ? கொலைக் குற்றத்திற்குரிய தண்டனை என்னவென்று தெரியுமா ?

பெரு ; (சினத்துடன்) வஞ்சனையால் பிறர் உடைமையைப் பறித்துக் கொண்டவருக்கு அளிக்கப்படும் தண்டனையைவிடக் கொஞ்சம் கூடுதலாவதுதான் .

இ கு: (நெஞ்சம் திடுக்கிடுகின்றான்) ..புலவரே; என்ன உளறுகிறீர்?

பெரு : அறநெறி மறந்த உனக்கு எனது பேச்சு உளறலாகத்தான் இருக்கும். வளம் பொங்கிய நாடு இன்று வறண்டு விட்டது. இல்லாமை எங்கும் நிறைந்தது. அறம் வீழ்ந்தது. மறம் வாழ்கின்றது. அன்பும் பண்பும அழிந்தன. வன்பும துன்பும் நிறைந்தன. கொள்ளை மலிந்தது; கொலை மிகுந்தது ... இதுவா நாடு ? ... இந்த இடுகாட்டிற்கு நீதானே காவலன் ?

இ.கு : (சினத்துடன் தரையில் காலை ஓங்கி அடித்து) புலவரே வரம்பு மீறுகிறீர்

பெரு : உனது மனச்சான்றின் மேல் ஆணையிட்டு இல்லை என்று சொல் பார்ப்போம். (சிறிது அமைதி) உன்னால் சொல்ல

முடியாது ... நாகன் விரித்த சூது வலையிலே நீ வீழ்ந்துவிட்டாய் அதிலிருந்து மீளுவதற்கு உன்னால் இயலவில்லை

இ.கு : இல்லை, இல்லை ... (தடுமாற்றத்துடன்) என் தமையன் அரசியலைத் துறந்து எங்கோ மறைந்துவிட்டார்

பெரு : துறந்து சென்றவரின் தலையைத் துணித்து வருபவருக்குப் பரிசு கொடுப்பதாகப் பறையறைந்துள்ளாயே! மறந்து விட்டாயா ?

இ கு : நாட்டின் நலத்திற்காக நாகன் செய்த ஏற்பாடு ...

பெரு : முதலில் நாட்டைக் கவரச்சொன்னான் கருணையே உருவான நின் தமையனைக் காட்டுக்குத் துரத்தி நாட்டைக் கவர்ந்தாய் அவரது ஆருயிரைப் பறிக்கச்சொன்னான் அப்படிச் செய்வோருக்குப் பரிசளிப்பதாக முரசறைந்துள்ளாய். உனது செயலை நீ ஆய்ந்து பார்த்தாயா ? இந்த நாகன் யார் ? உமக்கும் அவனுக்கும் என்ன உறவு ?

இ.கு : எமது வாழ்வையே தனது வாழ்வாக மதிக்கும் உயர்குணத்தான் நாகன்

பெரு . கருத்துத் தெளிவற்ற இளங்குமணா! கண்ணை மூடி ஒரு கணம் சிந்தனை செய்து பார் அண்ணனிடமிருந்து அரசைப் பறிக்கக் தூண்டினான் நேற்று தலைக்கு விலை கூறச்செய்தான் இன்று .. நாளை . !

இ.கு : நாளை ?

பெரு : உன்னையே அரசைவிட்டு ஓட்டத்துணிந்தால் : ... துணிந்தால் என்ன ? ... உறுதியாகத்துணிவான் ... பிறகு தானே அரசன் என முடிசூட்டிக்கொள்வான்.

இ.கு : (ஐயத்துடன்) அப்படியும் செய்வானா ? புலவரே! எனதுள்ளத்தைக் குழப்பாதீர் ... இப்போது செல்லும்

பெரு : எனக்குரியதைக் கொடுத்துவிட்டால் நான் செல்லுவேன்.

இ.கு : என்ன சொல்லுகின்றீர் ?

பெரு : வள்ளல் குமணனின் வாழ்வை முடிப்போருக்கு வளம் தருவேன் என்று உறுதி கூறினாய், அவனது வாளாலே அவனை மாய்த்து வந்துள்ளேன். இதோ அவ்வாள் !

இ.கு : (வாளை வாங்கிப் பார்த்துத் திகைக்கின்றான்) ஆம். இது என் தமையனுடையது தான். ஐயகோ ! என் செய்தீர், புலவரே ! (பதைக்கின்றான்)

பெரு : உடன் பிறந்தான் என்பதையும் மறந்தாய் உயர்குடிப் பிறப்பை மறந்தாய். உயர்ந்த பண்பிழந்தாய்: அறநெறி பிறழா வேந்தனுக்கு அழிவு செய்யத் துணிந்தாய். அற்பன் ஒருவனின் தூண்டுதலால அரச பரம்பரைக்கே அழிக்க முடியாத கறையை ஏற்படுத்திப் பெரும்பழி கொண்டாய் உனது ஆணையைத் தலைமேல் தாங்கிச் செயல் முடித்த எனக்குச் சிறப்புச் செய்வதை விடுத்து நெடுமரம் போல் நிற்கின்றாயே, இளங்குமணா!

இ. கு: (கண்ணீர் வழிய) பொருளை விரும்பி என் தமையனைக் கொன்றொழித்த கொடியவரா நீர்?

பெரு: அரசன் எவ்வழி அவ்வழிக் குடிகள். நீ சொன்னாய்; நான் செய்தேன்.

இ. கு: ஐயகோ! குமண வள்ளலே! உம் தம்பி என்று சொல்லிக் கொள்வதற்கே தகுதியில்லாதவன் நான். ஆயிரம் பிறவி எடுத்தாலும் தங்களைப்போன்றாரைக் காண்பதரிது. அறியாது கொடுமை பல செய்தேன். என்னைப் பொறுத்தருள யார் இருக்கின்றார்? எனக்குத் தந்தையாய், தாயாய், தமையனாய், அறிவுறுத்தும ஆசானாய், விளங்கினீர் அனைத்தையும் இக் கொலைகாரர் ஒரு நொடியில் பொடியாக்கிவிட்டார். இனி நான் என்ன செய்வேன்? ஒரே ஒரு கழுவாய்தான் உண்டு. உம்மைக் கொலைசெய்ய ஆணை இட்ட தான் அச்செயலை இப் புலவர் நாட்டிற்குணர்த்துமுன் என் ஆவியைப் போக்கிக் கொள்ளலே ஆகும்... ஆம்... அதுதான் எனக்கு ஏற்ற முடிவு. (கையிலிருக்கும் வாளால் தனது உயிரைமாய்த்துக்கொள்ள முயலுகின்றான். புலவர் பாய்ந்து வாளைப்பறித்துக்கொள்கின்றார்.) வள்ளல் குமணனைக்கொன்ற உமது கையால் நீரே என்னைக் கொன்றுவிடும். (மண்டியிடுகின்றான்)

பெரு: இளங்குமணா! எழுந்திரு. அருந்தமிழ் பாடும் புலவர் பெரு மக்கள் அழிவைச் செய்யார் இல்லாமை என்னைச் சூழ்ந்தது. வள்ளல் குமணனை நாடிச் சென்றேன். ஒன்றுமில்லை எனச் சொல்லி என்னை வெறுங்கையுடன் அனுப்ப மனமில்லானாய் உயிர்கொடுக்கத் துணிந்து இவ்வாளை நல்கினான் வள்ளல். அந்த வாளோடு உன்னிடம் வந்தேன். உயிரையே கொடையாகத் தரும் உள்ளம் கொண்ட அவ்வள்ளல் எங்கே? அருளாளன் உயிரையே பறிக்கத துணிந்த இருள் மனத்தான் நீ எங்கே?

இ. கு: புலவர் பெருமானே! என்னைப் பொறுத்தருள்க என்னைத் திருத்தி நன்னெறி உய்த்த திருவாளா! தங்கள் பொன்னடி பணிகின்றேன். என் தமையன் இருப்பிடம் தெரிவித்தால் அவரிடம் அரசப்பொறுப்பை விடுத்து என்றும்போல் நான் அவருக்குத் தொண்டு செய்வேன்...

பெரு: இளங்குமணா! உனது நல்மனம் வாழ்க. குமணன்பால் விரைந்து செல்வோம்.

இ. கு: சற்றுப்பொறுங்கள், பெருமானே!...ஏய்! யாரங்கே?... (காவலன் நுழைத்து வணங்குகின்றான்) நாகனை உடனே சிறையிலிடு. என் தமையனே அவனுக்கேற்ற தண்டனையை விதிக்கட்டும்.

பெரு: வெற்றி! நான் மேற்கொண்ட செயலிலே எனக்கு மாபெரும் வெற்றி, (இருவரும் நீங்குகின்றனர்,)

(காட்சி முடிவு)

காட்சி—6.

இடம் : காடு.

உறுப்பினர் : குமணன், முத்தன்

நிலைமை : குமணன் சிந்தனை தோய்ந்த முகத்துடன் அமர்ந்துள்ளான். அருகே முத்தழகன் துயரத்துடன் நிற்கின்றான்.

முத்தழகன் : புலவர் சென்றார்; என்னாயிற்று என்று தெரியவில்லை.

குமணன் : (இளநகை பூக்க) முத்தழகா! எவ்வாறானாலென்ன? எனது உயிரைப் புலவருக்குப் பரிசாகக் கொடுததுவிட்டேன் இனி நான் அவரது உடைமை. (புலவர் பெருந்தலைச்சாத்தனார் இளங்குமணன் மற்றும் பலர் நுழைகின்றனர். இளங்குமணன் குமணன் காலில் விழுகின்றான்.)

இளங் : (கண்ணீர் வழிய) அரசே! என்னைப் பொறுத்தருள்க அரசை மீண்டும் ஏற்றருள்க. உயிரையே தமிழ்ப்பாவலருக்குப் பரிசாகத்தந்த பெருந்தகையே! தங்கள் இளவலைப் பொறுத்தருளும் பெருமனம் தங்களுக்கு உண்டு என்னும் நம்பிக்கையால் வந்துள்ளேன. தாங்கள் எனது கொடிய குற்றங்களைப் பொறுக்காவிடில் திருந்திவிட்ட தங்கள் இளவலின் இன்னுயிரையாவது ஏற்றருள்க...(கதறுகின்றான்.)

கும : (கண்ணீர் நிறைய) இளங்குமணா! எழுந்திரு (எழுந்திருக்கின்றான்) எனக்கும் வயதாகிவிட்டது. அரசியலிலிருந்து ஓய்வு பெற விரும்புகின்றேன். ஆகவே...

இ. கு : புலவர் பெருமானே! தாங்கள்தான் தமையனுக்கு எடுத்துச் சொல்லவேண்டும்.

பெரு : குமணா! உனது ஆருயிரையே கொடையாகக் கொடுக்கத் துணிந்து வாள் கொடுத்தாய்; அவ்வாளே உனக்கு வாழ்வு கொடுத்தது. முதிரமலைக்கு நீயே மீண்டும் மன்னனாக வேண்டும் என்பதுதான் எனது விருப்பம் நின்னிளவலை அரசியல் நெறியில் பயிற்றுவித்த பின்னரே நீ துறத்தல் அறிவுடைமையாகும்.

கும : (புலவரின் அடிபணிந்து) உயிர் தந்த வள்ளலே! உங்களது ஆணை.

ஒருவர் : புலவர் பெருமான் பெருந்தலைச்சாத்தனார்!

எல்லோரும் : வாழ்க!

ஒருவர் : அரசர் பெருந்தகை, குமண வள்ளல்!

எல்லோ : வாழ்க!

ஒருவர் : அறநெறி திரும்பிய இளங்குமணர்!

எல்லோ : வாழ்க!

(காட்சி முடிவு)

STATEMENT ABOUT OWNERSHIP AND OTHER PARTICULARS ABOUT NEWSPAPER

THE "TAMIL POHZIL"

(MONTHLY)

Form IV

Rule 8 of the Press and Registration of Books act, 1867.

Place of Publication	:	Thanjavur
Periodicity of its Publication	:	Monthly.
Printer's Name	:	Sri N. Chinniah, for T. V. M. Mahalingam Mahalingam Press.
Nationality	:	Indian.
Address	:	1321, South Rampart Thanjavur.
Publisher's Name	:	S. Swayamprakasam B. A., B. L.,
Nationality	:	Indian.
Address	:	Karanthai Tamil Sangam, Karuntattankudi, Thanjavur.
Editor's Name	:	S. Swayamprakasam, B. A., B. L.,
Nationality	:	Indian.
Address	:	President, Karanthai Tamil Sangam, Karuntattankudi, Thanjavur.

Name and address of individuals who own the newspaper and partners or shareholders holding more than one percent of the total capital.	KARANTHAI TAMIL SANGAM THANJAVUR.

I, S. Swayamprakasam hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

Date; 26—4—66

S. SWAYAMPRAKASAM.
Signature of Publisher.

Regd. No. M. 7681.

விற்பனைக்குக் கிடைக்கும் நூல்கள்.

தொல்-சொல்—தெய்வச்சிலையார் உரை ...	2—50
நெல்லை வருக்கக் கோவை ...	0—12
சித்தராந்தாதி ...	0—12
சுருதி வீணை ...	0—25
தமிழரசி குறவஞ்சி ...	0—62
பரத சாத்திரம் ...	1—00
கவியரசு நினைவு மலர் ...	1—00
சிவமும் செந்தமிழும் ...	0—25
சிலப்பதிகாரம் — புகார்க் காண்டம் ...	0—50
Garland of Tamil Poetry ...	2—00
கச்சிக் கலம்பகம்—(பூண்டி அரங்கநாத முதலியார்) ...	0—50
அப்பர் புகழ்மாலை ...	0—25
சுந்தரர் புகழ்மாலை ...	0—25
பாரதசார வெண்பா ...	1—00
தொல்-பொருட்பாயிரம் உரை ...	0—12
யவன மஞ்சரி (த. இராமநாத பிள்ளை B. A., யாழ்ப்பாணம்)	1—50
இந்தியத் தலயாத்திரை (T. B. தாஸ் ராவ் B. A.,)	1—25
புலவராற்றுப்படை (அமிர்தம் சுந்தரநாத பிள்ளை) ...	0—25
கரந்தைக் கட்டுரைக் கோவை ...	1—75
தமிழ்ப் பொழில் துணர்கள் 1, 4, 5, 6, 8, 29, 31, 32, 34, துணர் ஒன்றுக்கு (12 மலர்கள்) ...	4—00

கரந்தைத் தமிழ்ச் சங்கத்திற்கு அளிக்கப்பெறும் நன்கொடைகள் வருமான வரிச் சட்ட பிரிவு 15-Bயின்படி வருமான வரிவிதிப்பிலிருந்து விலக்கப்பெற்றிருக்கின்றனவென்று சென்னை வருமானவரிக் கமிஷனர் அவர்கள் தமது 13-9-60-ஆம் நாளைய சி. நெ. 212 (27) 58 உத்தரவில் அறிவித்திருக்கிறார்கள்.

தமிழ்ப் பொழிலின் கையொப்பம்

		உள்நாடு.	மலேயா, இலங்கை முதலிய வெளிநாடுகள்
முன்பணம் ஆயுள் வரி	ரூ.	50 00	50 00
,, ஆண்டு வரி சங்க உறுப்பினர்க்கும் தலைமையாசிரியர் ஒப்பம்பெற்ற தனிப்பட்ட மாணவர்க்கும்		2 00	2 50
,, ,, ஏனையோருக்கு		3 00	3 50

Edited and Published by S. Swayamprakasam, B. A., B. L., Karanthai Tamil Sangam, Tanjore. Printed by N. Chinniah for T.V.M. Mahalingam Mahalingam Power Press, 1321, South Rampart, Tanjore